தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2	சென்னை	20—8—55	சனிக்கிழமை	இதழ் 10

சிங்காரத் தமிழ்மொழிப் பண்பும், செத்த வடமொழிப் பண்பும்!

களவும் கந்தருவமும் ஒன்று என்ற வினாவும் விடையும் 8-1-55 தென்றல் இதழில் தோன்றியதே இக்கட்டுரை தோன்றக் காரணமாகும். தோழர் 'ஒன்று' என வினவ, ஆசிரியர் 'ஆமாம்' என்ற முறையில் பதில் பகர்ந்திருக்கிறார். ஆனால் நுட்பமாக பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து பார்த்தால் களவும் கந்தருவமும் முரண்பட்டவை என்பது தெளிவாகும். 'களவு' என்பது தமிழர் போற்றிய காதல் மண முறையில் முதற்படியாகும்; அக்களவுதான் பின் கற்பாக மலர்ந்து மணம் கமழும் என்பது பண்டைத்தமிழர் கொண்ட கொள்கையாகும். இருமனம் ஒருமனம் ஆகி அன்பு அலர்ந்து காதல்மணம் கமழ்ந்து இன்பம் நுகரும் ஈடற்ற வாழ்வே 'களவு' எனப்படும். பின்னர் அது ஊரறிய, உலகறிய திருமணமாக திகழ்ந்துகற்பியலில் வந்து கனியும். இந்த உலகியல் உள்ளப்போக்கை உணர்ந்தே தொல்காப்பியர் போன்றோர் இலக்கணம் இயம்ப, திருவள்ளுவர் போன்றோர் இதுபற்றி இலக்கியம் தந்து சென்றனர்.

'கந்தருவம்' என்பது வேதத்துள் விளம்பப்பட்டுள்ள பிரமம்-தெய்வம், ஆரிடம், பிரசாபத்தியம், ஆசுரம், கந்தருவம், இராக்கதம், பைசாசம் எனப்படும் எட்டு வகை மண முறைகளுள் ஒன்றாகும். கட்டழகனும் காரிகை ஒருத்தியும் கண்டவுடன் காதல் கொண்டு கலந்து களிப்பது கந்தருவத்தின் இயல்பாகும். இந்த இயல்பு தமிழர் போற்றும் 'களவு' என்பதுடன் ஒப்பும் தன்மையதாம். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்றாற்போல அந்த உள்ளக்காதல் அல்லது கள்ளக்காதல் நீடித்து நிலைத்து நின்று பின்னர் கற்பாக மலர வேண்டும் என்பது தமிழர் விதித்த பண்பாடாகும். ஆனால் வடமொழி வாணர் அவ்வாறு கந்தருவரை கற்பு பற்றி வற்புறுத்தினரில்லை. கண்டால் கலந்து களித்து, விரும்பினால் விட்டு விலகிடும் போக்கு வடமொழிக் கந்தருவர் தன்மையாகும். ஆனால் கற்பு இன்றி களவு என்றே இடம்பெறாது என்பது பழந்தமிழர் நெறி முறை என்பதை உள்ளத்தில் ஊன்றிக்கொள்ள வேண்டும்.

"பிரமம், தெய்வம், ஆரிடம், பிரசாபத்தியம், ஆசுரம், கந்தருவம், இராக்கதம், பைசாசம் என்று திருமணம் பகுக்கப்படும்" (சூத்திரம் 21)

"பிராமணனுக்கு பிரமம் முதல் கந்தருவம் வரை ஆறும், க்ஷத்திரியனுக்கு ஆசுரம் முதல் பைசாசம் வரை நான்கும், வைசிய சூத்திரருக்கு மேற்சொன்ன நான்கில் இராக்கதம் நீங்க மூன்றும் தருமம் தரும் மணங்களாம்" (சூத்திரம் 23) மேற்கோளாகக் காட்டப்பட்டவை மனுதருமசாத்திரம் மூன்றாவது படலமாகும். இதனால் எண்வகை மணமுறை வடவர் வழக்கம் என்பது வெள்ளிடைமலையாகிறது.

களவுக்கும் கந்தருவத்துக்கும் உள்ள அடிப்படை முரண்பாட்டை ஆசிரியர் நச்சினார்க்கினியர் அருமையாக வரைவதைக் காணலாம். தொல்காப்பியம்,பொருளதிகாரம், களவியல் முதற் சூத்திரமாகிய

"இன்பமும் பொருளும்
அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த
ஐந்திணை மருங்கில்
காமக் கூட்டம் காணும் காலை
மறை ஓர் தேஎத்து
மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த்
துணைமையோர் இயல்பே"

என்ற தனுரையிறுதியில் "கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது என்றற்குத் "துறையமை" என்றார்" என்று தெளிவுபட விளக்கியிருப்பதுஇங்கே கருதத் தக்கதாகும்.

தமிழர் போற்றிய காதல் மண முறையில் களவு, கற்பு இவற்றின் இன்றியமையாத இயல்புகளை அறிதல் நலமாகும். பல்வகைப் பண்பாலும் ஒத்த தலைவனும் தலைவியும் காண்கின்றனர், "கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில" என்பது நிகழ்ச்சியாகி "கலப்பு" கனிந்துவிடுகிறது. தாய், தந்தை, ஊர் இன்ன பிறவற்றால் முன்பின் அறியாத அவ்விருவரும் கண்டவுடன் கருத்தொத்துக் கலந்த அக்களவுக் காதலின் தன்மையை ஒரு காதலனே கூறுகிறான் காதலியிடம், கேளீர்!

"யாயும் ஞாயும் யார் ஆகியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம்தாம்
கலந்தனவே"

[யாய்-என்தாய்: ஞாய்-உன்தாய்; எந்தை-எனது தந்தை; நுந்தை - உனது தந்தை; கேளிர்-உறவினர்]

பின்னர் "கலந்தோம் பிரிந்

(8-ம் பக்கம்)

கெட்டாலும் மேன்மக்கள்...

அமரகவிகள் அநேகரைப் போலவே, ஆங்கிலக்கவிஞன் ஆலிவர் கோல்டுஸ்மித்தையும் வறுமை வாட்டிப் பிழிந்தது. அன்றாடம் அவல வாழ்வு வாழ்ந்தாலும், தன்னோடொத்த ஏழை எளியவர்களிடம் அன்புகொண்டு, தனக்குக் கிடைக்கும் ஊதியத்தில் ஒரு பகுதியை அவர்களுக்காக செலவிட்ட நற்பண்பாளன் கோல்டுஸ்மித். இந்த காரணத்தினாலேயே பெரும் கடன் சுமை அவரை அழுத்திக்கொண்டிருந்தது. அவருடைய நெருங்கிய நண்பரான டாக்டர் ஜான்சன், ஏழை எளியவர்களுக்கு கருணை காட்டுவதால் தான் அவருக்கு கடன் அதிகமாகிறதென்று எடுத்துக் கூறி, இனிமேல் பிச்சைக்காரர்களுக்கு சல்லி காசுகூடக் கொடுக்கக்கூடாதென்று கண்டிப்பாக உத்திரவிட்டிருந்தார். கோல்டுஸ்மித்தும் மிகச்சிரமப்பட்டு இந்த முறையை அனுசரித்து வந்தார்.

ஒரு நாள் காலை ஜான்சனும் கோல்டுஸ்மித்தும் அவருடைய வீட்டில் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு பிச்சைக்காரப்பெண் நாலைந்து குழந்தைகளுடன் வாசலில் வந்து நின்றாள். ஜான்சன் படிப்பதை நிறுத்திவிட்டு அந்தப் பெண்ணை அலட்சியமாக ஏறிட்டுப் பார்த்தார். பிறகு "அவளைப் போகச் சொல்" என்று சொல்லிவிட்டு மீண்டும் பத்திரிகையில் முகத்தைப் புதைத்துக் கொண்டார்!

கோல்டுஸ்மித்துக்கு அந்தப் பெண்ணை பார்க்கவே பரிதாபமாயிருந்தது. ஏதாவது கொடுக்கலாமென்றாலோ, எதிரே ஜான்சன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்! பார்த்தார் கோல்ட்ஸ்மித்; அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. மெல்ல எழுந்து வாசலுக்குச் சென்றார். ஒரு ஷில்லிங் நோட்டை எடுத்து, ஜான்சன் கவனிக்காத சமயம் பார்த்து அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு, உரக்க, "போ! போ! உனக்கு ஒரு தம்பிடி கூடக் கொடுக்க முடியாது. உங்களுக்கெல்லாம் கொடுத்து கொடுத்து தான் நான் ஓட்டாண்டியாகி விட்டேன். இங்கு நிற்காதே; போய்விடு!" என்று கூச்சலிட்டு அவளை அனுப்பி விட்டார்.

—இரத்தின மனோகரன்.

அந்திய சாசனம்

கடைசியாக வந்திருக்கிறேன், தனிமையாக !

நீ எங்கிருக்கிருய் என்று எனக்குத் தெரியாது. நீ இல்லை தான். எனினும் போகும் போக்கில் எனக்கொரு ஆவேசம். நீயென்று ஒன்று இருந்தால்...

நீ எங்கிருக்கிருய் என்றெனக்குத் தெரியாது. வானின் அந்தமற்ற எல்லைக் கோட்டிலோ, சண்சிமிட்டும் தாரகைகளுக்கெல்லாம் அப்பால், அம்புலியையும் தாண்டி எங்கேனும் நீ இருப்பாய், என்றுகூட என்னல் நம்பமுடியவில்லை. தூணிலும் துரும்பிலும் இருப்பாய் என்றெல்லாம் சொல்கிருர்கள். நம்ப முடியவில்லை. அந்தியின் இந்த அமைதியான சூழ்நிலையில் என் அருகில் எங்காவது... ?

புத்தறிவிற்கு ஒவ்வாத எண்ணங்கள் தான்... இல்லாத ஒன்றை நீ... நீ... என்று வைத்து கேள்விக்குறி எழுப்புவதும் அறியாமை தான் எனினும் எல்லாவற்றிற்கும் 'உன்னை'க் காரணம் காட்டும் அவர்களுக்காகவாவது...

இன்னும் தொடர்கிறேன் : உலகின் சிருஷ்டியாளனே ! நீயென்று ஒன்றுண்டாயின் எனக்குச் சில ஐயப்பாடுகள் உள்ளன... எனக்கு நிறையக் கேட்க வேண்டும்... எனினும் தெம்பற்ற ஒரு நிலை--நான் வெறும் எலும்புக் கூடாகிவிட்டேன். எனக்கு உண்ண உணவில்லை. உடுக்க உடையில்லை. படுக்க இடமில்லை. என்னைப்போல் கோடானு கோடி உயிரினங்கள்--மனிதர்கள்--புழுக்களாக சாக்கடையில் நெளிபவர்களாக... இதற்கெல்லாம் என்ன பொருள் ? உனக்கேன் இந்த ஓரவஞ்சனை... ? நடக்க முடியாதவர்கள்...பேச முடியாதவர்கள் பெருநோயினர்... இவர்கள் எல்லாம் இருக்கையில் உல்லாசபுரி வாழ்வினர். எனக்கு அவர்களைப் பற்றி அடுக்கமுடியவில்லை. நீயென்று ஒன்றிருந்தால், நீ ஓர வஞ்சனையாளன்... துரோகி - துர்மார்க்கி !!

உன் ஆக்கினையின்றி புல் பூண்டு கூட அசையாது என புராணங்கள் கொட்டி கோஷிக்கின்றனவே, எனிந்த ஈனர்களின் ஓலம் உன் காதுகளில் விழவில்லை ? நீ எல்லா உயிர்க்கும் உடையவன். அணுமுதல் அண்டம் வரையில் படைத்துப் பாதுகாக்கும் உனக்கு பாரபட்ச மனப்பான்மை...

இந்த மண்ணுலக நினைவு உனக்குண்டா ? 'ஐயனே !' என அம்மையார் அழைக்க. 'அம்மையே!' எனத் தோளில் கை புதைத்து மானசரசும், அமராவதிபுரமும் செல்லும் உனக்கு மண்ணுலக எண்ணம் இல்லாது போயிருக்கலாம்...

...மறதி...

கோடிக்கோடி யுகங்களாக உனக்கேற்பட்ட இந்த மறதி...

இல்லை. நீ எதையுமே மறக்கவில்லை... நீ எல்லாம் அறிபவன் என்று புராணங்களும், புரோகிதரும் சொல்கின்றனர்... அப்படியென்றால் இவைகளுக்கெல்லாம் என்ன பொருள் ?

இங்கு. நிம்மதியென்பதே கிடையாது. கண்ணீர்... அழுகை... ஈன ஓலம்... போர்... இவைகளையெல்லாம் நீ காண்பதில்லையா ? கேட்பதில்லையா ? அறிவதில்லையா? அந்த கண்ணீர்க் குளங்களும், ரத்தக் கடலுகளும் உனது கேளிக்கைக்கு களிநிலங்களா ?

இதயமற்ற ஈசனே ! உனக்கு எத்தனையோ பெயர்கள் துதிகள்...

ஈசனே ! பசிக்கிறது ; தாகம் எற்படுகிறது. வயிற்றின் கொடும்பசியும், இதயத்தின் தாகமும்...இதற்காக உலகில் எல்லோருமே உன்னிடம் மண்டியிடுகின்றனர்...இதற்கெல்லாம் நீ என்ன செய்தாய் ?

அவர்கள் மதியீனர்கள்... அவர்கள் மந்த புத்தியுடையோர்... உன்னைத் துதிக்கும் நேரத்தில் ஆக்க வேலையிலாவது ஈடுபட்டிருக்கலாம் . நான் உன்னை எசிக்காட்டும் நேரமும் வீண் தான்... எனினும் எக்கப் பெருமூச்சுகளின் இடையே இதை பிறருக்குச் சொல்லிக் காட்டிவிட்டு மடிந்து போகலாம் என்றொரு ஆசை...

நீ ஒரு முட்டாள்தனமான கற்பனை ! அன்பின் விலையறியாதவன்... பண்பில்லாதவன்... சூன்யம்... சூன்யம்... கருணாமூர்த்தியென்பதும், அருள்சோதி என்பதும், பொய்... புளுகு... வெறும் வார்த்தைகள்... எனினும் நான் உன்னை, நீயென்று சுட்டியே கேட்கிறேன்... ஏனென்றல் நீ இருப்பதாகச் சொல்கிருர்கள் அல்லவா அவர்களுக்கும் படட்டும் என்ற நோக்கோடு !

கொள்ளை நடக்கிறது... கொலை நடக்கிறது... காமவிருந்துகள், வெறியாட்டங்கள்... எல்லாம் காண்பவனே உன் பெயர் கருணாசாகரமா ?

இது சட்டம்--உண்ணவும் உடுக்கவும் இன்றி நாங்கள் கொடுமைப் படவேண்டும்--இது நியதி ? ஏன் அப்படித்தானே ? உனது நியதிகளுக்கெல்லாம் நாங்கள் தலையாட்டிப் பதுமைகளாக இருந்த நாள் போய்விட்டது... நாறும் எலும்புக் கூட்டிற்கு பின் அணி அணியாக... வீரர் படை... அறிவுப் படை... உன் கொட்டம்--உன் தூதுவர்களின் கொடுங்கோன்மை மலையேறும். புதுமையும் பூரிப்பும் கமழும் எதிர்காலம்... அன்று நீ இங்கே மனிதர்களிடையே உலவுவாய்... பிறகு நீயில்லை. ஏனென்றல் அறியாமை தானே 'உன்னை' கருவுற்றுள்... அந்த அறியாமையையே கொன்று தீர்த்தால்... பிறகு ?

அது கிடக்கட்டும். அது புதிய பாதை ! உன்னிடம் எனக்கு கடுகத்தனைகூட மதிப்பில்லை.

உன் நரகமும், சொர்க்கமும் எனக்கு லட்சியமில்லை... வேண்டுமானல் தீமழை பொழியவைத்து எங்களை அழித்துவிடு ! அல்லது புயலை அனுப்பி இந்த பிரபஞ்சத்தையே அழித்துவிடு !

எங்களையெல்லாம் அழித்துவிட்டால் உன்னைப் போற்றுபவர்கள் இல்லையென்றகிவிடுமே என்று பயப்படுகிருயா ? எங்கள் வாழ்த்துப்பாக்களில் உனக்கு இன்பம் வேண்டும்...? அப்படித்தானே...! அதோ ஆலயமணி ஓசை கலகலக்கிறது !!

"கடவுள் வணக்கத்திற்காக எல்லோரும் வாருங்கள்." பாதிரியார் அழைக்கின்றனர். சங்கம் முழங்குகிறது... இன்னொரிடத்தில்... ஓம் சாந்தி... ஓம் சாந்தி... என்னதான் சாந்தி இந்த உலகில்...?

துடிக்கும் இதயத்துடன் நாங்கள் தலைவணங்க வேண்டுமா ? எதற்காகத் தலைவணங்க வேண்டும்? எங்கள் இதயத்தில் ஒரே பொறி--உன்னை--நீயென்ற கனவை களைத்தெறியவேண்டும் என்று !

போதும். போகிறேன்...

தொடர்புகள் அறுபடுகின்றன... என் அந்திய சாசனம் கிறுக்கப்பட்டுவிட்டது... புரிந்தவர்களுக்குப் பாடம்! இல்லையேல் இந்தக் காகிதம் எங்கேனும்--யாராலாவது கிழித்தெறியப்படலாம். கவலையில்லை. கடமை நிறைவேறிவிட்டது. நான் வாழ்ந்ததின் சத்துப் பொருளைப் பொறித்து வைத்தேன். அதாவது நீ என்பது இல்லை !!

—பத்மாவதி.

தமிழ்மன்றத் துவக்க விழா

சென்ற 11-8-55 வியாழனன்று மாலை 3-20 மணிக்கு பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத் துவக்கவிழா மாணவர் தலைவர் திரு. சா. அமீது, பி. ஏ. தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் உயர்திரு. மு. வரதராசனார் வரவேற்புரை வழங்கினார். நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. மன்றத்தைத் துவக்கிவைத்துச் சொற்பொழிவாற்றினார். தலைவர் திரு. சா. அமீது நாவலரை அறிமுகப் படுத்துங்கால் குறிப்பிட்டதாவது. "நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் கொண்ட கொள்கைக்காகக் குருதி கொட்ட நேரினும் இறுதிவரை உறுதிதளரா உள்ள உரமுடையவர். தமிழகத்தின் தலைசிறந்த சொற்பொழிவாளர்களில் தனிச் சிறப்புடையவர். இலக்கிய உலகில் ஏறுநடை போடுபவர்."

நாவலர் "வள்ளுவர் வகுத்த வாழ்நெறி" எனும் பொருள் பற்றிச் சுவையான சொற்பொழிவு நிகழ்த்துங்கால் சொன்னதாவது. "வையகத்திற்கு வள்ளுவர் வழங்கிய குறள் பிற நூல்கள் எல்லாவற்றையும் விடத் தலையாயது. வள்ளுவர் வகுத்துத் தந்துள்ள வாழ்நெறி எக்காலத்திற்கும், எந்நாட்டிற்கும் ஏற்றது. கல்வி, காதல், ஒழுக்கம் என்பன பற்றி வள்ளுவர் வழங்கிய கருத்துக்கள் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இன்பம் பயப்பன." தக்க சான்றுகள் தந்து நாவலர் நகைச் சுவையுடன் நல்லுரை நல்கி மாணவர் பெருங் குழாத்தை நனி மகிழ்ச்சியுறச் செய்தார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் திரு. வ. இராசமனோகரன் நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிவுற்றது.

பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

ஏஜண்டுகள் தேவை

தாத்தையங்கார்பேட்டை
ஷிமோகா
கள்ளக்குறிச்சி
அகமதாபாத்
வண்டிப்பெரியார்
பழனி
திருவனந்தபுரம்
கொடுமுடி
திருவையாறு
கீரமங்கலம்
ஆயிக்குடி
வீரவநல்லூர்
பள்ளபட்டி(கரூர்)
கடையம்
எருமப்பட்டி
கொள்ளேகாலம்
பந்தல்குடி
பங்காரபேட்டை
உண்ணாமலைக்காடு
குரிச்சி(சேலம்)
கல்லக்குடி
ஒட்டன் சத்திரம்
நீடாமங்கலம்
பெட்டைவாய்த்தலை
மல்லூர்.

> ''போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தைஎன(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !''

எண்ணம்

போனதே மானம் !

காவடி தூக்கிக்கொண்டு போனுர்கள், நமது மந்திரிகள் டில்லிக்கு ! காவடி அளவிலே காலே அரைக்கால் அளவு 'பிச்சை' போட, மத்திய சர்க்காரின் திட்டக்குழு முடிவு செய்தது ! சென்னை அரசாங்கம் தயாரித்த திட்டத்தின் மதிப்பீடு ரூ 393.7 கோடி. திட்டக்குழு கொடுப்பதாக முடிவு செய்துள்ள தொகை ரூ. 165 கோடி ! ''ஏக இந்தியா வாழ்க ! பாரத மாதாவுக்கு ஜே! பண்டிட் நேருஜிக்கி ஜே!'' என்று கோஷித்தபடியே மத்திய சர்க்காரின் சென்னை ஏஜண்டுகளான மதிமந்திரிகள் சென்னை திரும்பினர்.

எடுத்துச் சொல்லும்போதெல்லாம் ஏற்க மறுத்து, ''வடநாடு ஒன்றும் நம்மை வஞ்சிக்கவில்லை'' என்று மனச்சாட்சியை விற்றபடி பேசிக்கொண்டிருந்த நமது மந்திரிகளுக்கு இப்போதாவது புத்தி வந்திருக்கவேண்டும். இன்னும் வரவில்லையென்றால், அவர்கள் முழுக்க மானத்தை இழந்துவிட்டார்கள் என்றுதான் பொருள்.

நிதியமைச்சர் சுப்பிரமணியம் அடிக்கடி தெரிந்தோ தெரியாமலோ இந்தியாவின் அரசியல் ஒற்றுமையை வலியுறுத்துபவர். நேருவுக்குப் பின்னலே தண்ணீர் தூக்கிச் செல்லவேண்டிய நிலை வந்தாலும், ''இந்தியாவின் அரசியல் ஒற்றுமைக்காக'' அதைச் செய்பவர் ! ''தமிழில் பேசாதே ! இந்தியில் பேசு !'' என்று எவனுவது ஒரு லம்பாடி கத்தினுலும், ''இந்தியாவின் ஒற்றுமைக்காக'' வாயை மூடிக்கொள்பவர். இப்போது பூசப்பட்ட கரியையும் ''இந்தியாவின் அரசியல் ஒற்றுமைக் காகச்'' சகித்துக்கொள்வார்.

ஆனுல், உணர்ச்சியும் அறிவும் உள்ள பொதுமக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்துவிட்டு, பிச்சை கேட்க ஓடுவதும் வடவரின் பாதந்தொட்டுக் கெஞ்சுவதும், கொடுத்த பிச்சையைத் தூக்கிக்கொண்டு திரும்புவதும் இப்படியே எத்தனை காலத்துக்கு நடைபெற்றுக்கொண்டிருப்பது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

வளங்கொழிக்கும் ஒரு நாடு-தனியாக, பல்லாயிரம் ஆண்டுகள் தலை நிமிர்ந்து வாழ்ந்த நாடு-வடநாட்டார் நிர்வாணமாகத் திரிந்த நாளிலே, ஒரு குழாயில் ஒன்பதினுயிரம் கெஜம் துணியை அடைத்துக் காட்டிய நாடு, வடநாட்டார், ஒரு மொழி-அதற்கொரு லிபி-என்பதை அறியாத காலத்திலேயே-ஏராளமான காவியங்களைப் பாடி எழுதிவைத்த நாடு-''இந்தியாவின் அரசியல் ஒற்றுமை'' என்கிற கோமாளித்தனமான பல்லவிக்காகவும், பண்டிதநேரு எனப்படும் அதிர்வேட்டின்மீதுள்ள பற்றுதலுக்காகவும் எவ்வளவு காலம் பலியாவது ?

கொடுக்கும் வரியெல்லாம் பாதுகாப்புக்காகவும், பசியை அடக்கவும், தேசியச் செழிப்புக்கும்தான் என்று 'காரணம் காட்டப்பட்டது. இப்போது, திராவிடத்தைப் பொறுத்தவரை, பாதுகாப்பும் இல்லை; பசியும் அடங்கவில்லை; தேசியச் செழிப்பும், தேய்ந்த செருப்பாகிக் கிடக்கிறது ! பம்பாய்-அமதாபாத்-நகரங்களைப் பார்த்துவிட்டு, சென்னை மாநிலத்திற்கு வருவோமானுல்-நாம் காணும், காட்சி ரத்தத்தைக் கொதிக்க வைக்கும் ! இத்தனையும் மறைத்து, காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் ஒரு கூட்டம் தென்னுட்டில், 'காங்கிரஸ் என்ற' போர்வையில் உலாவுகிறது. ''பண்டிதநேரு, ரஷ்யா சென்றுர். அங்கே அமோக வரவேற்பு ! இங்கே மலர்மாலை'' என்றெல்லாம் வாணவேடிக்கை விடுவதைத் தவிர நாட்டு நடப்பை எண்ணிப்பார்த்து, முடிவான வழிதேடும் புத்தி கடுகளவும் கிடையாது.

அது இருந்திருக்குமானுல், பிச்சை கொடுக்கும் திட்டக்குழுவைப் பார்த்து, அடித்துக் கேட்டிருக்கமுடியும். இல்லையேல், ''உனக்கு வரி கொடுக்கத் தேவையில்லாத ஒரு தனி அரசு தென்னுட்டில் அமையும் !'' என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கமுடியும் !

இனி, பொதுமக்கள்தான் விழித்துக்கொள்ளவேண்டும். ஏஜண்டுகளை நம்பினுல் வாழ்வு கிடைக்காது ! ஏற்ற வழியை நாம்தான் தேடிக் கொள்ளமுடியும். திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றே அந்த வழியைக் கண்டு சொல்லக்கூடியது !

கல்லக்குடி மாகாவியம்

—— கண்ணதாசன் ——

பெயர்சூட்டி மணம்பெற்ற பேராளன் தலைதூக்கி
துயர்சூழ்ந்த தாய்நாட்டின் சுகக்காதை சொல்கின்றுன் !
உயிராடும் உடற்கூட்டில் உணர்வற்ற அதிகாரி
அயராத விழியோடும் அவன்செய்கை காண்கின்றுன் !

வேறு

முடித்தனர் ஒன்றை ! ஏனும் மூண்டஇப் போரின் செய்தி
அடுத்துள வடக்குந் தாண்டி அகிலமெல் லாமும் சென்று
வெடித்திட வேண்டு மென்னும் விருப்பினில் தினைத்தா ராகப்
படுத்திட நினைத்தார், வண்டிப் பாதைமுன்-சரளை மீது !

எடுத்தஇம் முடிவைச் சின்ன இருவிழி இடையிற் கொண்டு
வடித்தனன் கருணு, சூழ்ந்த மறவர்கள் உணர்வான் வேண்டி-
அடுத்துள உறவோ ரெல்லாம் ஆசிகள் வழங்கு மாறு
எடுத்தனன் கரங்கள் ! மேலே ஏற்றினன் ''வணக்கம்'' என்றுன் !

பதைப்புறு நெஞ்சின் வேகம் பந்தயக் குதிரை போலும் !
விதிர்ப்புறும் உடலின் தோற்றம் வியர்வையின் குளங்கள் போலும்!
வதைப்புறு நாட்டைக் காக்க வணங்கிய மறவன் கையின்
கொதிப்பினைக் கண்டார் மேனி கொண்டதிக் குணங்கள் யாவும் !

''வாழிய'' என்பார் தாமும் வார்த்தைகள் வரமாட் டாமல்
கோழையின் குணங்கள் தோன்றக் குமுறிடும் முதியோர் தாமும்
ஆழியின் அலைகள் தோல அழுதிடும் தாய்மார் தாமும்
சூழநின் றிருத்தல் கண்டான் தூயவன் ! நடந்தான் சாக !

என்னஇத் துணிவு காணீர் ! இற்பெருங் கிழத்தி வாழ்வும்
சின்னதோர் குழவி வாழ்வும் செல்வனை ஈன்றுள் வாழ்வும்
பன்னவும் முடியாத் துன்பம் படைக்குமே ! அறிந்தும் வீரன்
தன்னரும் தாய்நாட் டிற்காச் சாகவும் துணிகின் றுனே !

பகைஒண்டிக் கிடக்கு மிந்தப் பாழ்வெளி எனக்கொன் றுலும்
நகைமண்டிக் கிடந்த நாடு நலம்பெற் றுஇறந்து பட்ட
தொகைஎண்ணிப் புதிய வாழ்வில் துலங்கட்டும் என்பான் போல
புகைவண்டிப் பாதை முன்னம் போயினன் ! படுத்தான் ! ஐயோ

பின்னரும் சென்றுர் ஐவர் ! பேச்சுமூச் சில்லை ! கண்டோர்
என்னதான் நடக்குமோ என் றிமையினைச் சாத்தா ராகி
தொன்னையின் வாயைப் போலத் தூக்கிய வாயை மூட
எண்ணவும் மாட்டா ராகி இளைக்கிறுர் திசையைப் பார்த்து !

சட்டமும் அதிகா ரத்தின் தலைவரும் இதுபோல் செய்கை
எட்டுமென் றறியா ராக ஏங்கினர்; மீண்டும் மீண்டும்
சட்டையைச் சரிசெய் தார்கள் ! தமக்குளே யோசித் தார்கள் !
வட்டமாய்க் கூடி ஞர்கள் ! வரம்பினை ஆராய்ந் தார்கள்!

மெத்தையில் துயில்வார் போல, மேனியை வாடா முல்லைக்
கத்தையில் சாய்த்தார் போல, கண்களைக் கனவில் தேக்கி
அத்தையின் மகளைக் கண்ட ஆனந்தம் போல-காதல்
வித்தையைப் பயில்வார் போல வீரர்கள் கிடந்தார் சாய்ந்து !

துன்னலர் படைகள் சூழ்ந்து, கொன்றிடத் துடிக்கும் வேளை
புன்னகை வருமா ? அங்கே வந்தது பூத்துப் பூத்து !
மன்னவர் மணிமா டத்து மாப்பிள்ளை மார்கள் போல
அன்னவர் கிடந்தார் அண்ணுத் துரைக்குநாம் இளையோர் என்று !

''அண்ணனுக் குள்ள நெஞ்சில் அரைநெஞ் சுஎமக்கு முண்டு
பெண்ணினங் கூட வீரப் பெற்றிகள் பலவுங் கொண்ட
மண்ணினிற் பிறந்த தாலே மனத்துணி வதிகம் உண்டு !
கண்ணியம் கடமை உண்டு ! கட்டுப் பாடனைத் துமுண்டு !''

''சாவிலே துன்ப மில்லை ! சதிபுரி வடவர் காலில்
வீழ்வதே துன்பம் ! அந்த வீழ்ச்சியைத் தகர்க்கும் போரில்
போவது உயிரென் றுலும் பொருந்திடும் வரலாற் றுள்ளே !
ஆவது ஆக !'' என்றுர் அண்ணனின் தம்பி மார்கள் !

சட்டங்கொள் அதிகா ரத்தார் தமக்குளே முடிவு கொண்டு
கிட்டினர் அங்கே ! சாய்ந்து கிடந்தநம் உயிரைப் பார்த்து,
''ஒட்டுதல் தானே கொள்கை ! உடன்செய்த தேனிச் செய்கை !
விட்டிடு வீர் எழுந்து விரைவினில் போவீர் !'' என்றுர் !

அப்பொழு தில்லா மீசை அசைந்திடச் சிரித்து, ''ஐயா,
கைப்பிடி யாக எம்மைக் கைதுசெய் திடலாம் ! இன்றேல்
இப்புகை வண்டிக் காலால் ஏற்றிட லாம்!கைக் கொண்ட
துப்பாக்கிக் குண்டி ஞலே துளைத்திட லாம்எல் லாமும்

நலமென எண்ணங் கொண்டே நாடியுள் ளோம்நாம் இங்கே !
[1]கிலமெனக் கிடக்கும் நாட்டின் கேடுகள் தீர்ப்பான் இந்தப்
புலம்புகுந் துள்ளோம் ! எங்கள் பொன்னெழிற் றிராவி டத்துக்
குலமிதை அறிய வேண்டும் ! கூப்பிட் டுச்சொன் னதாலே

எழுவது சரியு மல்ல; ஏற்றபோர் முறையு மல்ல !
[2]கழிபடர் கொடுத்த போதும் கலங்கிட மாட்டோம் ! என்று
வழுவறு கருணு சொன்னுன் ! ''வாருங்கள் !'' என்றுர் தம்முட்
பழுதறு [3]''தலையர் !'' வீரர் படுக்கையைச் சுருட்டி ஞர்கள் !

கூடிய கூட்டம் யாவும் கூவிற்று : ''கருணு வாழ்க !!''
ஓடிய தெல்லாம் அன்னேன் உடலினைத் தழுவி வாழ்த்த !
பாடிய கூட்டம் கண்டு பதறிய ''தலையர், ''-கூட்டம்
நாடிட முடியா வாறு நடத்தினர் மறுபு றத்தே !

(தொடரும்)

1. சிதைவு, 2. மிகுந்த துன்பம். 3. சர்க்கின் (பழுதறு தலையர் என்றது, தம்மைப் பொறுத்தவரை அவர்கள் குற்றமற்றவர்கள் என்ற வாறு)

கடைசி ஆசை!

தமிழ்ப்பித்தன்

" மீனா! கோமதிக்கு உடம்பு அபாயகரமான நிலையிலிருக்கிறதாம். உடனே புறப்பட்டு வரும்படி கோவையிலிருந்து தந்தி வந்திருக்கிறது. இந்த ஆறேகால் மணி வண்டிக்கே புறப்பட்டுவிடலாம், இன்னும் நேரம் இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தேன். உடனே என் மனைவி மீனா வீட்டிலுள்ள பொருள்களை எல்லாம் அப்படி அப்படியே போட்டுவிட்டு, பெட்டி வகையருக்களுடனும், குழந்தை பூமாலையுடனும் பிரயாணத்துக்குத் தயாரானாள். அவளது வதனத்திலே எந்தவித சலனம் நிறைந்திருந்தது என்று என்னால் அப்போது யூகிக்க முடியவில்லை. சிறிதுநேரம் கவலையின் ரேகை தெரிந்தது. சிறிது நேரம் ஏதோ ஒருவகையான பயங்கரம் காணப்பட்டது.

ரயில் புறப்படுவதற்கும் நாங்கள் ரயிலில் ஏறுவதற்கும் நேரம் சரியாக இருந்தது. அன்று ரயிலில் கூட்டம் அதிகம் இல்லாததால் எங்களுக்கு உட்காருவதற்கு இடம் கிடைத்தது. பூமாலை ஜன்னல் ஓரத்தில்தான் உட்காருவேன் என்று அடம்பிடித்தாள். அவளைச் சமாதானம் செய்தாகிவிட்டது. ஆனால், மீனா, தான் ஜன்னலருகே உட்கார எண்ணினாள். வயதான பெண்களும் இப்படித்தான் சில சமயங்களில் சிறு குழந்தைகள் மாதிரி அடம்பிடிப்பார்கள். ஒரு வழியாக அவளையும் சமாதானம் செய்தேன்- ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்தால் கரி கண்ணில்விழும் என்று சொன்ன பின்னர்தான் அவளும் ஒப்புக்கொண்டாள், பின்னர் நான்தான் ஜன்னல் அருகே உட்கார்ந்துகொண்டேன்.

வண்டி பெரம்பூரைத் தாண்டியது. மாமா எனக்குத் தந்தி கொடுத்ததை எண்ணி என் மனம் வியந்தது. பையிலிருந்த தந்தியை மீண்டும் எடுத்துப் படித்தேன் :

" கோமதிக்கு அபாயம். உடனே புறப்படவும்"
குழந்தைவேலுப் பிள்ளை
கோவை

படித்துவிட்டு மறுபடியும் பைக்குள் வைத்துக்கொண்டேன். வண்டி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது- வண்டியைத் தொடர்ந்து என் மன ரயிலும் 'பழைய நினைவு' என்ற புகைவண்டி நிலையத்தை நோக்கி வேகமாக ஓடியது.

★

கோமதி என் தாய் மாமனுக்கு ஒரே மகள். ஒரே மகள் என்ற காரணத்தாலும் பல வருடங்கள் கழித்துப் பிறந்தவள் என்ற எண்ணத்தாலும் அவள் செல்லமாக வளர்ந்து வந்தாள். "பெண்ணைப் போற்றி வளர்" என்ற உரையில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர், என் மாமா. மூடநம்பிக்கை உடையவராக இருந்தபோதிலும் கூட எப்படியோ தன் மகளைப் பள்ளி இறுதி வகுப்பு வரை படிக்க வைத்துவிட்டார். அதற்கு மேலும் படிக்க வைத்திருப்பார். ஆனால், தன் பெண் நிறையப் படித்துவிட்டால், அவளுக்கேற்ற கணவன்,- அதேபோல் நிறையப் படித்தவன் தன் உறவினர்களிலே கிடைக்காமல் போய்விடுவானே என்ற எண்ணம்தான் தடை செய்தது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் கல்லூரியின் முதல் வகுப்பில் கால்வைத்தேன். என் முழு வருடத்தேர்வும் முடிந்தது. விடுமுறையைக் கழிக்க என் மாமாவின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். என் வருகையை என் மாமா, அத்தை, எல்லோரும் விரும்பினர். ஏன், கோமதிகூட என் வருகையை அறிந்து குதூகலம் அடைந்ததாகத்தான் கேள்விப்பட்டேன். உண்மையும் அதுதான். என் சொந்த ஊரில் தனியனாக இருந்த என்னை, கோவையில் கோமதியின் உள்ளன்பு கவரத்தான் செய்தது. அவளது மோகனச் சிரிப்பு என் மனதிற்கு மகிழ்வைத் தந்தது. பாலைபோன்ற என் வாழ்விற்கு அவள் உறவு பசுஞ்சோலையாகாதா என்றுதான் நான் ஏங்கினேன், அந்த நேரத்தில். அத்தான் என்ற காரணத்தால் என்னை அடிக்கடி கேலி செய்வாள் கோமதி. நானும் தான்! எங்கள் இருவரையும் காணுகின்ற போதெல்லாம் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சரியான ஜோடி என்றுதான் சொன்னார்கள். என் மனத்திலும்கூட ஓரளவு சபலம் இருக்கத்தான் செய்தது. என் மாமா பண ஆசை பிடித்தவராயிற்றே, கோமதியை நமக்கு எங்கே தரப்போகிறார் என்றுதான் என் உள்ளம் எண்ணியது,—நம்பியது.

ஆண்டுதோறும் வருகிற விடுமுறைதான் அந்த வருடமும் வந்தது. ஆனால் மற்றெல்லா ஆண்டுகளையும்விட அந்த வருடம் மிகவும் இன்பமாக இருந்தது. ஒவ்வொரு வருடமும் நான் ஒவ்வொரு ஊருக்குச் சென்றிருக்கிறேன். அந்த வருடம்தான்,-என் மாமா வீட்டிற்குச் சென்றிருந்த வருடம் தான் எனக்கு என்றும் நீங்காத மகிழ்வைத் தந்தது. அதை எண்ணி எண்ணி இதயத்தில் உதயப் பண் பாடிக்கொண்டிருந்தேன்.

விடுமுறை முடிந்தது; கல்லூரியும் திறந்தது சொந்த ஊர்வந்து சேர்ந்தேன். பிரியா விடை பெற்று வந்தேன் என் கோமதியிடமிருந்து அவளைப் பிரிந்துவந்து பல மாதங்கள் ஆகியும் அவள் என் நெஞ்சத் திரையிலே எந்த நேரமும் நடனம் ஆடிக்கொண்டிருந்தாள். ரசாயனப் பாடத்தை எடுத்துப் படித்தால் அந்த ரஞ்சிதம்தான் அங்கே இருப்பாள். கணிதத்தை எடுப்பேன். அந்தக் கன்னிதான் அங்கே களிநடம் புரிவாள்! நாளாக ஆக என் நெஞ்சம் என் வசமே இல்லாது போய்விட்டது. அந்தக் கன்னியின் 'காதல் நினைவு' என்னை வருத்தியது, வாட்டியது. கல்லூரிக்குச் சென்றுவரும் நான், வகுப்புக்கு உரிய பாடப்புத்தகத்தைக் கொண்டு செல்ல மறந்துவிடுவேன். கணிதத்திற்குப் பதிலாக ரசாயனப் பாடத்தைக் கொண்டு செல்வேன். ரசாயனப் பாடத்திற்குப் பதிலாக கணிதம் கொண்டு செல்வேன். எனது விசித்திரமான போக்கைக் கண்டு நண்பர்கள் கேலி செய்தனர். அது அவர்களுக்கு வழக்கமான தொழில்தானே! நல் உணர்வோடு இருக்கிறவர்களையே கேலி செய்து அவர்களை வாட்டுவது நண்பர்களின் செய்கையாக இருக்கும் போது, ஒரு பெண்ணைப் பற்றிய எண்ணத்திற்கு இடம் கொடுத்து, பைத்தியமாக அலைந்த என்னை அவர்கள் கேலி செய்ததில் வியப்பொன்றும் இல்லை.

'வடிகட்டும் தேர்வு' வந்தது. என் மனமோ வனிதை கோமதியை எண்ணி வட்டமிட்டுக்கொண்டிருந்தது. இருந்தாலும் வடிகட்டும் தேர்வு வாழ்வை நிர்ணயிக்கும் தேர்வு என்று எண்ணிய காரணத்தால் நான் ஒருவாறு மனத்தை அடக்கிக்கொண்டேன். கவனத்தோடு கொஞ்ச நாட்கள் படித்தேன். வடிகட்டும் தேர்வில் வெற்றியும் பெற்றுவிட்டேன். என்னைக் கேலி செய்த நண்பர்களில் சிலர் விடிய விடியப்படித்தும் தேர்வில் வெற்றி பெறவில்லை. எல்லோரும் வியப்பெய்தினார்கள். நானும் வியந்து கொண்டேன், எனது திறமையை!

கல்லூரியிலே தமிழ் மன்றத் துவக்க விழா! அறிஞர் ஒருவர் அந்த விழாவைத் துவக்கி வைத்துப் பேசினார். தமிழ் மன்றத்தைத் துவக்க வந்த அந்த அறிஞர், தமிழ்ச் சாதிக்கே நல்வாழ்வைத் துவக்கி வைத்தார். தமிழ் இளைஞர்களின், குறிப்பாக கல்லூரி மாணவர்களின் வாழ்க்கை எந்த விதமாக அமைய வேண்டும் என்பதை அழகாக எடுத்துரைத்தார். கல்லூரி மாணவர்கள் எல்லோரும் தத்தம் சுய சாதியிலேயே திருமணம் செய்து கொள்வதை விட, கலப்புமணம் செய்து நாட்டின் சீர்கேட்டைப் போக்க வேண்டும் என்றும் இளைஞர்களில் பலர் 'விதவா விவாகம்' செய்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சொந்த சாதியிலே விருப்புக் கொண்டு இருந்த என்னை கொஞ்சம் கொஞ்சமாக, கலப்பு மணத்திலே விருப்பம் கொள்ளச் செய்தது அந்த அறிஞரின் அறிவுரை. விதவா விவாகத்தைக் கூட என் உள்ளம் வரவேற்றது. அதன் பின்னர் அந்த அறிஞரின் சொற்பொழிவை நான் ஆவலுடன் கேட்பேன். தமிழகத்து இளைஞர் பலர் அவரின் உரையைச் செயலாக்க முயன்றனர். அவர் உரையால் என் மனம் கோமதியைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்தது. காதல் மணமாக இருந்தாலும் சரி, சுய சாதியிலேயே திருமணம் செய்து கொள்வது சிறப்பாகாது என்ற எண்ணம் என் இதயத்திலே வலுப்பெற்றது.

அடுத்த வீட்டு மீனாள், இளவயது மங்கை! ஐம்பது வயதுக் கிழவனுக்கு அவளை மணம் முடித்துக் கொடுத்தனர். அவளின் பெற்றோர். வாங்கிய கடனைக் கொடுக்க முடியாததால் அந்த வயோதிக வல்லூறுக்கு அந்த மாடப் புறாவைப் பலி கொடுத்தனர் என்றறிந்தவுடன் நான் பதைபதைத்துப் போனேன். மணம் ஆகி ஒருமாதம் கூட ஆகவில்லை. அந்த வல்லூறின் ஆயுள் முடிந்தது, ஆம்! அந்தக் கிழவன் இறந்து போனான். சமூகம் மீனாளை இளமையிலேயே விதவையாக்கி மகிழ்ந்தது. என் மனம் அந்த அன்னத்தை, விதவை மீனாளை நாடியது. துணிந்து விட்டேன். உற்றார் வெறுத்தாலும் சரி பெற்றோர் தூற்றினாலும் சரி என்று எண்ணினேன். மீனாளிடம் சம்மதம் கேட்டேன். அவள் உள்ளத்திலே ஒப்புதல் இருந்தது. ஆனால் அவளின் உதடுகள்...ஒப்புதலைத் தெரிவிக்கவில்லை. தன்னை மணந்து கொண்டால் எனது பெற்றோர் என்னைத் தூற்றுவார்கள் என்று சொன்னாள். அது 'தெரிந்துதான் முன் வந்திருக்கிறேன் மறுக்காதே', என்று சொன்னேன். மிகுந்த சிரமத்திற்குப்பின் அவளின் ஒப்புதல் பெற்றேன். தான் துன்பப்பட்டாலும் தன்னால் பிறர் துன்பம் அடையக்கூடாது என்ற நல்ல எண்ணம் தான் மீனாளின் அன்பு மனத்திலே இருந்தது.

ஒரு நாள் நானும் அவளும் பதிவுத்திருமணம் செய்து கொண்டோம். இதனால் என் பெற்றோர் என்னைத் துரத்தி விட்டனர். சமூகம் சீர்திருத்தம் அடையவில்லை என்பதற்கு என் பெற்றோர் தான் எடுத்துக் காட்டு. விஷயம் அறிந்த என் மாமா வெருண்டார். என் கோமதி வேதனைப் பட்டாள். தன்னை ஏமாற்றியதனால்

(6-ம் பக்கம்)

பொதுக் குழுவுக்கு

கண்ணதாசன்

கடந்த 14--8--55 அன்று அருப்புக்கோட்டையில் இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக செயற்குழு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் கூடியபொழுது, காலியாயிருக்கும் ஒரு ஸ்தானத்திற்கு நடத்திய தேர்தலில் **ஆசிரியர் கண்ணதாசன** ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்ந்தெடுத்த அருமைத் தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

மாணவர் வெளியீடுகள்

குழந்தைக்குரல் (அழ. வள்ளியப்பாவின் பாடல்கள்)	1--0--0
போலி இளவரசன் (எகிப்தியக்கதை)	0--8--0
மந்திரக்கல் (சீனத்துக்கதை)	0--8--0
சிப்பாய் முரளி (தமிழகத்துக்கதை)	0--4--0

விற்பனையாளர்களுக்கும், நூல் நிலையங்களுக்கும் கழிவு உண்டு.

மாணவர் இல்லம்
ரங்கநாதம் செட்டி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை-6.

இலக்கியத்தில் காதல்

காரை முத்துப்புலவர்

அரசாங்கம் நடத்துகிருள் ஒருத்தி.

ரத கஜ துரக பதாதிகளோடும் ஐந்து மந்திரிகளோடும், வாட்படை, வேற்படையோடும், முரசொலிக்க வும், நிலாவட்டக் குடைக்கீழிருந்து அரசாளுகிருள்! ஊரிலே, வாழ்ந்து செத்துப்போன ராணிகளும் ராசாக் களும் நாட்டை ஆண்டார்கள்; நகரை ஆண்டார்கள்--சிலர் காட்டை யும் ஆண்டார்கள்! ஆனல், அத் தனை பேரையும் அப்புறம் தள்ளி விட்டு, தன்னைத்தானே ஆண்டு கொள்ளும் வித்தையைக் கூறு கிருள், மேற்படியாள்! எப்படிப் பட்ட ராணி, எத்தகைய அரசாங் கம்? கேளுங்கள் கதையை.

நாற்குணமும் நாற்படையாம்! அதாவது அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்று அளந்துகொட்டு கிருர்களே, அந்த நால்வகைக் குணமுமே ரத, கஜ, துரக, பதாதி யாம்--அதாவது, தேர், யானை, குதிரை, காலாள் எனப்படும் நால் வகைப் படைகளாம்! தேரிலே அச் சத்தை எற்றிவிட்டு, யானையின் மேல் நாணத்தை அமர்த்திவிட்டு, குதிரைமீது மடமையைத் தூக்கி வைத்துவிட்டு, காலாலே பயிர்ப்பு நடந்துவருகிறது! ஆயிற்ற?--நால் வகைப் படை!

ஐம்புலனும் நல்லமைச்சாம்!-- மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும் ஐந்து புலன்களும் ஐந்து நல்ல மந்திரிகளாம்!

மெய்--உணர்ச்சி மந்திரி
வாய்--சுவை மந்திரி
கண்--காட்சி மந்திரி
மூக்கு--நுகர்ச்சி மந்திரி
செவி--கேள்வி மந்திரி!

"தீண்டும் இன்ப"த்தைத் தெள் ளத்தெளிய விளக்கி, 'சிவ்'வென்று உடலில் சூடேற்றுவார் உணர்ச்சி மந்திரி.

இது இனிப்பு--இது கசப்பு என விளக்குவார் சுவை மந்திரி-- அதைத் தவிர அடுத்த இலாகாவின் வேலையைச் செய்ய அவரால் முடி யாது!

இப்படி--இலாகா பிரிக்கப்பட்ட மந்திரிகள், ஒருவர் இலாகாவில் மற்றொருவர் குறுக்கிடமுடியாத அளவுக்கு வரம்பறுத்துக்கொண்டு நிற்கிருர்கள்.

ஆயிற்று--படை, அமைச்சு!— இனி?

அந்த ராசாங்கத்துக்கு முரசு வேண்டாமா? இரண்டு முரசுகள்-- கலகலவென்று ஒலிக்கின்றன. இரண்டு முரசுகள் என்றதும் நண் பர்கள் சிந்தையைக் குழப்பிக் கொள்ளாமல் பாதங்களைப் பார்ப் பார்களாக! ஆம்; காலில் சிலம்பு கலகலவென முரசொலிக்கிறது! ஒரு கண், வேற்படை; மற்றொன்று வாட்படை! இப்போது 'நிலாவட்டக் குடை' வேண்டாமா? அதுதான் அவளது, மொத்தமுகம்! இதன் கீழே பெண்ணியல்பாகிய ராசாங்கம் செழித்துக் கிடக்கிறது! அவளது ஆட்சி, நோய், நொடி, வறுமை-- "உறுபசியும் ஓவாப் பிணியும்" இல்லாது கம்பீரமாக நடைபெறு கிறது. அவள் குடிதழீஇக் கோலோச்சுகிருள்! இந்த ராசாங் கம் எப்படி நடக்கும்? போர்முறை எப்படி இருக்கும்? கேளுங்கள் அதையும்:

நாணப்படை யானைமீது ஏறிய படி, அவளைத் தலைகுனியவைத்து நடத்தி வருகிறது -- வரும்போது, "வருகிருள் மகாராணி!" என்று கால் முரசுகள் ஒலிக்கின்றன. "கண்ணே!" எனும் குரல் கேட் கிறது! உடனே 'செவி' என்னும் பெயர்கொண்ட கேள்விமந்திரி தன் இலாகாவில் அந்த வார்த்தையைப் பதிவு செய்துகொண்டு, இப்படி ஒரு குரல் கேட்டதை, காட்சிமந்திரி யாகிய, கனம் கண் அவர்களுக்குத் தெரிவிக்கிருர்--உடனே காட்சிமந் திரி நிமிர்ந்து பார்க்கிருர்--அடுத்த விநாடி அச்சப்படை (அதாவது தேர்ப்படை) வந்து அந்த மகா ராணியைப் பயமுறுத்துகிறது. அவள், அச்சத்தில் அழகு ததும்ப நிற்கிருள். உடனே, குரல்கொடுத்த அந்த ஆண் அச்சந்தவிர்க்க அருகில் வருகிருன்--அவளது நுகர்ச்சிமந் திரியாகிய கனம் மூக்கு அவர்கள், தன் இலாகாவில் அந்த ஆடவனின் மணத்தைப் பதிவு செய்துகொள் கிருர்--அந்த அளவுக்குக் கிட்ட வந்துவிட்டான், அவன்! அப்படியே கட்டி ஒரு முத்தம்--கட்டாணிமுத் தம்--கொடுக்கிருன். உடனே சுவை மந்திரியாகிய கனம் வாய் அவர்கள், அதன் சுவை 'இனிப்பு' என்று பதிவு செய்கிருர்--அடுத்து, அவன் அவளை இறுக அணைத்துக் கொள் கிருன்--உணர்ச்சி மந்திரியாகிய-- முதன்மந்திரி--மெய் அவர்கள் அந் தப் பெண்மை அரசுக்கு முழு அனுமதி தருகிருர்--நாணத்தை உடைக்கிறது படை--பிறகு தமை மறந்து பூரிக்க, நலம் பாடி இரவு செல்கிறது! இதுதான் அவளது ராசாங்கத்தின் ஒரு நாள் நடப்பு! போர்முறை!

இந்த நடப்பையும் போர்முறை யையும் சொல்லாமல், ராசாங்க இலாகாக்களை மட்டும் பிரித்து வைத் திருக்கிருன் ஒரு கவி. அதன் தொடர்ச்சியாக நான் அனுமானித் ததே மேற்படி நடப்பு!

யார் அந்தக் கவி?--புகழேந்தி!

அந்த மகாராணிதான் -- தம யந்தி!

இது காணப்படுவது நளவெண் பாவில்!

அது இது:

நாற்குணமும் நாற்படையா
ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா--
வேற்படையும்
வாளுமே கண்ணு
வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு!
— 39 —

சரி. முரசொலித்ததல்லவா சிலம்பு, அது இப்போது--அடுத்த பாட்டில்--அழ ஆரம்பித்துவிட்டது! கண்ணீர் சிந்திக் கதறுகிறது.

"ஐயோ! நான் என்ன செய் வேன்! என்னைக் காலில் தாங்கிப் போகும் கண்மணியின் இடை ஒடிந்துவிடுமே, என்ன செய்வேன்! இன்றோ நாளையோ அது நேர்ந்து விடுமே! நீண்ட நாள் இவளை வாழ விடாதே!"

என்று புலம்பிப் புரண்டு அழு கிறது சிலம்பு! ஏன்? உயர்ந்துள்ள இளம்கொங்கைகளின் பாரம், கண் மணியின் இடையை முறித்துவிட லாம் என்ற பயம்! இறுதிவரை இந்த உயிரைக் கொண்டுசெலுத்த மாட்டாதே என்ற பயம்!

அது இது:

மோட்டிளங் கொங்கை
முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று
வாய்விட்டு—நாட்டேன்
அலம்புவார் கோதை
அடியிணையில் வீழ்ந்து
புலம்புமாம் நூபுரங்கள் பூண்டு
— 40 —

[மோட்டு-உயர்ந்துள்ள; நாட்டேன் அலம்புவார்கோதை-புதிய தேன் மேலெழும் (மலர் சூடிய) கூந்த லாளின்; நூபுரம்-சிலம்பு.]

"மோட்டிளங் கொங்கை"யாம்! வார்த்தையைப் பாருங்களேயா! சும்மா, குன்றையும் குடத்தையுமே சொல்லிக்கொண்டிருக்கும் கம்ப னைக்காட்டிலும் இவன் உயர்ந்தவ னில்லையா!

'தனபார'த்தால் இடை ஒடிந்து விடும் என்று சிலம்பு அழுவதாகக் கூறப்படும் இதனை, தற்குறிப்பேற்ற அணி என்கிருர்கள் பண்டிதர்கள்! சரி. அந்தப் பாரத்தினல் இடை ஒடிந்துவிடும் என்கிற கற்பனை மிகைப்பாட்டை, எதிர் உவமை கொடுத்துத் தூக்கி எறிகிருர் இன் னொருவர்! அவர்தான் குற்ருலக் குறவஞ்சி ஆசிரியர்!

சிங்கன், சிங்கியிடம் வருகிருன்.

"அடி சிங்கி! உன் தனபாரத் தினல் இடை வளையவில்லையா? ஒடியவில்லையா?" என்பதுபோல கிண்டலாகக் கேட்கிருன்.

சிங்கி நிமிர்ந்து பார்க்கிருள்- அவள் கண்களிலே ஒரு அலட்சியம்! "பைத்தியக்காரா!" என்பதுபோல் இருக்கிறது அது! உடனே பளிச் சென்று சொல்கிருள்:

"கொடிக்குச் சுரைக்காய்
கனத்துக்கிடக்குமோ சிங்கா!"

--கொடி சிறியதுதான். அதிலே பெரிய சுரைக்காய் காய்த்துத் தொங்குகிறது! கொடி அறுந்தா விட்டது! அந்தக் கனத்தை அலட்சி யமாகத் தாங்கிக் கொள்ளவில் லையா! அதுபோல!- என்கிருள்.

சிங்கன் என்ன செய்வான்! அதற்குமுன்னலே தனபாரத்தைக் கொடி தாங்காது என்று சொன்ன வர்களை சபித்திருப்பான்!

ஆனல், இந்த இயற்கை நிலை களைப்பற்றி யெல்லாம் புகழேந்தி கவலைப்பட வில்லை. கவிமிகைப் பாட்டுக் கற்பனையிலேயே விளாசு கிருன். இடையை இன்னும் மிகைப் படுத்தி, "வண்டுகளின் இறகி லிருந்து வரும் மெல்லிய காற்றுக் கும் அது துவளும்" என்கிருன்! அப்படியென்ருல் அந்த இடை எப்படி யிருக்கும்! சும்மா கனவு மாதிரி இருக்கும்! அப்படியே கரைந்துவிடும்!

தமயந்தியின் இடையைச் சிறு காற்றிலே துவள வைக்கும் அந்தக் கவிதை இது:

என்றும் நுடங்கும்
இடைஎன்ப ஏழுலகும்
நின்ற கவிகை நிழல் வேந்தே!
—ஒன்றி
அறுகாற் சிறுபறவை
அஞ்சிறகால் வீசும்
சிறுகாற்றுக் காற்றுது தேய்ந்து!
— 41 —

[நுடங்கும்-துவளும்; அம்சிறகு- அழகிய சிறகு.]

ஹிட்லரின் மாயப்பெட்டி

ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தவுடனே முதன் முதலாக ஒரு காரியம் செய்தார். ஜெர்மனியிலுள்ள சகல விவசாயப் பண்ணைகளுக்கும் மின்சார சப்ளைக்கு எற்பாடு செய்தார். பிறகு, விவசாயத்துக்கென்றே தயாரிக்கப்பட்ட சிறிய மோட்டார் இயந் திரங்களை, அந்தப் பண்ணைகளுக்கெல்லாம் அளித்தார்.

1937-ஆம் ஆண்டு ஒவ்வொரு விவசாயப் பண்ணைக்கும் நன்ருய் ஸீல் போட்ட இயந்திரப்பெட்டி ஒன்று, நாஜி சர்க்காரிடம் இருந்து வந்தது. "பொம்மைகள் உற்பத்தி செய்யும் பிரமாத மான ஒரு தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்கள் இந்தப் பெட்டியிலே இருக்கின்றன. இவற்றை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதை, பெர்லின் நிபுணர்கள் வந்து உங்களுக்குக் கற்றுக்கொடுப்பார்கள். அதுவரையில் இதைத் திறக்காமல் பத்திரமாய் வைத்திருங்கள்" என்று ஒரு தாக்கீதும் கூடவே வந்தது. கிராமத்து விவசாயிகள் அப்படியே காத்திருந்தார் கள். பெட்டிகள் இரண்டு மூன்று வருஷ காலம் மூடியபடியே தூங்கிக்கொண்டிருந்தன.

போலந்துமீது பாயச் சிறிது காலத்துக்கு முன்னே, அந்தப் பெர்லின் நிபுணர்கள் காளான் முளைப்பதுபோல், ஜெர்மன் விவசாயப் பண்ணைகளில் புகுந்தார்கள். அந்த மாயப்பெட்டி களையும் உடைத்தார்கள். உள்ளே பற்பல ஆயுதங்கள் இருந்தன. அவற்றைக் கைக்கொண்டு, யுத்த டாங்கிகளுக்கு வேண்டிய வெவ்வேறு பகுதிகளை வெவ்வேறு பண்ணைகளிலும் விவசாயி களைக் கொண்டு, அந்த நிபுணர்கள் செய்யத்தொடங்கிவிட்டார் கள்! இப்படி ஒவ்வொரு பண்ணையிலும் தயாராகும் தனித் தனிப் பகுதிகளெல்லாம் வேறிடம் சென்று ஒன்றுசேர்ந்து, டாங்கிகளாய் மாறி, போர்முனையை நாடிச் சாரை சாரையாய் ஊர்வலம் தொடங்கி விட்டனவாம்!

மறக்க முடியாது!

வானம் நீலமாக இருக்கிறது. விரிகடலின் வண்ணமும் நீலந்தான். வானத்தின் வண்ணம், அதன் கண்ணீரில் கரைந்து கடலில் கலந்துவிட்டதோ? அந்தப் பரந்து கிடக்கும் கடல்மீது என் காதலர் மீன்பிடிக்கச் சென்றிருக்கிறார். உலகமே! நீ மெதுவாக மூச்சுவிடு. உனது மூச்சு பெருமூச்சாக மாறினால் அவரது படகு என்னாவது? எம் மக்களின் தவிப்பும் எனது நிலையும்... ஐயோ... என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லையே? உனது மூச்சை மெல்லிய தாக்கு. அவர் ஓடிவரும் அலைகளுடன் போட்டியிட்டு, வென்று களிப்போடு வருவார். அவருக்கு நீயும் தொல்லை தராதே.

தொடர் அலைகளுடன் போரிட்டு, கடு மழைக்கும் கொடும் புயலுக்கும் தப்பி, உயிருக்குத் தினம் தினம் போராடும் இந்த மீன்பிடிக்கும் தொழிலை விட்டு விடுங்கள் என்று சொன்னால் கேட்கிறாரா? தொழில்மட்டுமின்றிப் பொழுதுபோக்காகவும் இருக்கிறதாம். கடலிலே படகினைச் செலுத்திச் சென்றவுடன் கரையினில் காத்துக் கொண்டு கிடக்கும், அந்த உடலுக்கு மட்டும்தான் அந்தத் துயரம் தெரியும். இவருக்கு என்ன தெரிகிறது நான் படும் துயரம்...

நிலவு, தனது அல்லியெனும் காதலியைக் காண வேகமாக ஓடி வருகிறான். இந்தக் கதிரவனோ அவனுக்குப் பயந்துகொண்டு, காதலியின் கனியிதழை விட்டு விட்டு ஓடுகிறான், சுத்தக் கோழை. எனிப்படி பயந்து சாகிறான்? இவனுக்கும் அவனுக்குமென்ன அவ்வளவு தீராப் பகை? இவன் இவ்வளவு கோழையாக இருக்கிறான், இவனையும் போய்க் காதலிக்கிறாளே இந்தத் தாமரை. தமிழ்க்குடியிலே பிறந்தவள்தானா அவள்? மலர் அரசியாம், மலர் அரசி. சுத்தக் கோழை.

நிலவு கதிரவனை விரட்டிக் கொண்டு சிறிது சிறிதாக முன்னேறுகிறான். அடி ஏமாந்த தாமரையே! உனது ஏமாளித்தனத்தைக் கண்டுதான் இந்த அல்லி உன்னை அடிக்கடி இழிவு படுத்துகிறாள். நீ புத்தியுள்ள பெண்ணாக இருந்தால் அவரை--உன் காதலரைப் போகவிடுவாயா? போகாதிருப்பின் அவரது பொற்கதிர்கள் உலகத்தை அரசோச்சும். என் காதலர் விரைவில் வீடு திரும்பத் துணையாக இருக்கும். உனக்கும் எவ்வளவு மகிழ்ச்சி. எனக்கும் எவ்வளவு இன்பமாக இருக்கும்?...

இங்கு பனிச் சொல் பெய்யும் எம் குழந்தைகள் அவருக்காகக் காத்துக் கிடக்கின்றன. அவரையோ இன்னுங் காணோம். பையிலே உணவுப் பொருள்களோடும் கையிலே தின்பண்டங்களோடும் வரவிருக்கும் அவரை எண்ணியபடி நிற்கின்றன.

இரை தேடிச் சென்ற தாய்ப் பறவையை எண்ணி ஏங்கியபடியே இருக்கும் குஞ்சுகளைப் போன்று, படகு தெரிகிறதா, பலகாரம் எப்பொழுது கிடைக்கும் என நாவைச் சுவைத்தபடி, கடலையே நோக்கிய வண்ணமாக இருக்கின்றனர். அவரையோ இன்னுங் காணோம்.

மீன்பிடிக்கச் சென்ற படகுகள் ஒன்று ஒன்றாக வந்துகொண்டிருக்கின்றன. நிலவின் ஒளியிலே அவைகள் எப்படி மின்னுகின்றன. இந்தக் குழந்தைகள் என் மடியிலே தலையைப் பதித்துக்கொண்டு உறங்கத் தொடங்கிவிட்டன. செல்வங்களே! நீங்கள் உறங்குங்கள் அப்பா வந்ததும் அதிகமாக மிட்டாய் வாங்கிவந்து தரச் சொல்லுகிறேன்.

அலைகடலே! அவரைச் சீக்கிரமாக அனுப்பு. உனதன்பு மடியிலே புரண்டுகொண்டு என்னை நோக்கி ஓடிவருகிறாரே என்ற பொறாமையால் அவரைத் தடுத்து உன்னிடமே நிறுத்திக்கொள்வாயோ என எண்ணினேன். நீயோ பண்புள்ள பெண்ணாகத் தமிழகத்தைத் தொட்டுக் கட்டி மகிழ்வதால், தமிழ்ப் பண்பில் திளைத்திருக்கிறாயோ? பொறாமையில்லாது, எங்களுக்கு வாழ வழி காட்டும் ஆழ் கடலே நீ வாழ்க! உனது பெருந்தன்மை கண்டு மகிழ்கிறேன்; போற்றுகிறேன். உன்னைப் போன்றே, இந்தப் பண்பு, மனித இனம் முழுமைக்கும் பரவினால் உலகில் எத்தகைய அமைதியும் பண்பாடும் மிளிரும்! தமிழகம் இத்துணை இழிநிலையிலா இருக்கும்? தமிழ் ஆட்சிமொழியாக, இத்தனை போராட்டங்களும் மாநாடுகளும் நடத்தியாகவேண்டிய நிலையிலா இருக்கும்?

நிலவு, வானமென்னும் சோலையிலே பூத்துக் குலுங்கும் புதுமலராகக் காட்சியளிக்கிறது. பறவைகள் கூடக் குஞ்சுகட்கு இரையூட்டிவிட்டுத் தங்களது கூடுகளிலே உறங்கத் தொடங்கிவிட்டன. பசுமை பொருந்திய வயல்வெளிகளிலே மேய்ந்துவிட்டு ஆடுகள் திரும்பி வந்து உறங்குகின்றன. நொண்டியான ஒரு சில ஆடுகள்தான் அங்குமிங்கும் அலைகின்றன. குட்டிகள் தாயின் மடிமீது தலைவைத்தபடி அப்படியொன்றும் இப்படியொன்றுமாக உறங்குகின்றன. அலைகளும் ஓய்வெடுத்துக் கொண்டன. ஆனால் நானும் என் செல்வங்களும் மட்டும் இன்னும் காத்துக் கிடக்கிறோம். இவரையோ இன்னுங் காணோம்.

அப்பா... நிலவின் ஒளியிலே பொன்னிறமாக மின்னுகின்ற அவரது படகு வருகிறது. அவர் களைத்துப்போய் வருகிறார். அவரிடத்திற்கு நான் செல்லுகிறேன். போர்க்களத்திற்குச் சென்று மீண்ட காதலனைப்போல வரும் அவரை, நான் வரவேற்கிறேன். ஆகா! அதில்தான் எவ்வளவு இன்பமிருக்கிறது. நான் போகிறேன். கடலே! உன்னை மறக்கமுடியாது! மறக்கவே முடியாது!

ப. முல்லைவழுதி.

கடைசி ஆசை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேதனைப்பட்டாளோ, அல்லது விதவையை மணம் செய்து கொண்டதால் வேதனைப்பட்டாளோ எனக்குத் தெரியாது. ஆனால், எனக்குப் பலவிதத்திலும் எதிர்ப்புதான் இருந்தது. அந்த நேரத்திலே எனக்கு திருச்சியில் அரசாங்க அலுவல் கிடைத்தது. நானும் மீனாளும் சென்றுவிட்டோம். பெற்றோரைப் பற்றிய எண்ணமே எனக்கில்லை. பணங்காசு வேண்டுமென்றால்லவோ பெற்றோரைத் தேட வேண்டும்? வருகின்ற சம்பளத்தை வைத்துச் செட்டாக வாழ்ந்து வந்தோம். மீனாள் ஏற்கெனவே வாழ்க்கைச் சந்தையில் இருந்த வளாயிற்றே! எனவே தான் எங்களால் செட்டாக வாழமுடிந்தது.

இரண்டாண்டுகள் கழிந்தன. மீனா பூமாலையைப் பெற்றெடுத்தாள். பொறுப்பற்று இருந்த என்னைக் குழந்தை பூமாலை பொறுப்புள்ள தந்தையாக்கியது கண்டு பூரிப்படைந்தேன். பூமாலைக்கு ஒரு வயது முடிந்தது. அவளின் பிறந்த நாள் கொண்டாடினோம். அன்றுதான் முதலில் கூறியிருந்த தந்தி வந்தது கோவையிலிருந்து. என் மாமா கோபத்தை விட்டு விட்டு குணத்தோடு தந்தி கொடுத்திருந்ததை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தந்திரமாக இருக்குமோ என்று கூடச் சந்தேகப்பட்டேன். விதவையைத் திருமணம் செய்து கொண்ட போதிலும் கூட என் மனத்திலே ஒரு வகைவேதனை இருக்கத்தான் செய்தது. என்னையே நம்பி இருந்த கோமதியை ஏமாற்றி விட்டேனே என்பது தான் அது!

''என்னங்க, ஊரு வந்துடுச்சு'' என்று என் மனைவி மீனாள் சொன்ன பின்னர்தான் என் சிந்தனை அறுபட்டது.

என் மாமாவின் வீட்டிற்குக் குடும்பத்தோடு சென்றிருந்தும் அவர் கோபம் கொள்ள வில்லை. சாந்தமாக வரவேற்றார். வீட்டின் உள் அறை இருட்டாக இருந்தது. விளக்கு இருந்தும் அந்த அறையில் வெளிச்சம் அதிகம் இல்லை. கட்டிலில் ஓர் உருவம், மெலிந்து எலும்பாகிப் போன ஓர் உருவம் படுத்திருந்தது. ஆம்! அது என் கோமதி தான்! அந்த நாட்களிலே அழகின் சிகரமாக விளங்கிய என் கோமதியா இந்த நிலையிலிருக்கிறாள்? என்னால் நம்பவே முடியவில்லையே! குழந்தை பூமாலை கோமதியின் மெலிந்த மேனியைக் கண்டு கூப்பாடு போட்டாள். மீனாவின் கண்ணில்கூட துயரத்தின் சாயல் காணப்பட்டது!

''கோமதி! அத்தான் வந்திருக்காரம்மா!'' என்று சொன்னார் மாமா! மீனாளும் குழந்தையும்உடன் வந்திருப்பதை மாமா சொல்லாதது அவரது வெறுப்பின் காரணமோ, கோபத்தின் காரணமோ அறியேன். ''அத்தான்! வந்து விட்டீர்களா'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தாள் கோமதி. என் அருகில் அமர்ந்திருந்த மீனாளைக் கண்ட கோமதி, அவள் தான் என் மனைவி என்பதைத் தெரிந்து கொண்டு அவளுடன் பேச ஆரம்பித்தாள்: ''அக்கா! அத்தான் எனக்குக் கிடைக்காவிட்டாலும், உனக்குக் கிடைத்ததைக் கண்டு மகிழ்கிறேன். உங்கள் வாழ்க்கை இன்பமாகவே இருக்கட்டும்.''

இதைச் சொல்வதற்குள்ளேயே அவள் பேச்சு பல இடங்களில் தடைப்பட்டது. நா, குழறிற்று. என்னை நோக்கியவாறே! ''அத்தான்! நான் உங்களை விரும்பியிருந்தேன். ஆனால் தாங்கள் தங்கள் எண்ணத்தை என்னிடம் சொல்லிக் கொள்ளாமலேயே ஊருக்குப் போய் விட்டீர்கள். உண்மையாகவே தாங்கள் என்னைக் காதலித்தீர்களா? அத்தான்! காதலித்திருந்தால் 'காதலித்தேன்' என்று சொல்லுங்கள், என் ஆத்மா சாந்தியடையும்! நான் நிம்மதியாகச் சாகிறேன் அத்தான், காதலித்தேன் என்று சொல்லுங்கள். எனது கடைசி ஆசையை நிறைவேற்றுங்கள்'' — அவளது கடைசிப் பேச்சு.

நான் மீனாளை ஏறிட்டுப் பார்த்தேன். அவள் முகத்திலே சற்று நேரத்திற்கு முன்பு இருந்த துயரம் மறைந்து ஆத்திரத்தின் அடையாளம் தான் காணப்பட்டது.

கோமதியை நோக்கி, ''கோமதி நான் உன்னைக் காதலித்துத்தான் இருந்தேன், சந்தேகமே வேண்டாம், என்கொள்கைதான் நம்மைத் தம்பதிகளாக்காமற் போய்விட்டது'' என்று சொன்னேன். ஒரு நீண்ட பெரு மூச்சு-அந்த அறை எங்கும் பரவியது. அதைத் தொடர்ந்து கோமதியின் உயிரும் பிரிந்து சென்றது. அவளது கடைசி ஆசையும் நிறைவேறியது.

அந்த நேரத்திலே என் கண்களில் இரு துளி கண்ணீர்! அது கோமதியின் வாழ்வு என்னால் பட்டுப் போய் விட்டதே என்ற எண்ணத்தால் எழுந்தது! மீனாளின் கண்களிலே இருதுளி கண்ணீர்! அது தன்னை வைத்துக் கொண்டே தன் கணவர் வேறொரு பெண்ணைக் காதலித்தேன் என்று சொன்னாரே என்ற கோபப்புயலால் ஏற்பட்டது!

வெண்பாப் போட்டி 15.

★

ஈற்றடி :

தொட்டாலும் தோன்றும் சுகம்

முடிவு தேதி 3-9-55.

முகவரி :—

வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6.



கண்ணதாசன்

ஈஸ் : வையம் உன்னை இகழ்வதற்கு நீயே வழிதிறந்து வைத்து விட்டாய். ஆனாலும்...கம்பநாட! இந்தப் பா உள்ள ஏட்டை இப்போதே கிழித்துவிட்டால், இகழ்விலிருந்து நீ தப்பலாம்!

கம் : (முடிவோடு) குருதேவா! இதுபற்றிய தங்கள் கருத்து இனி எனக்குத் தேவையில்லை. வான்மீகி இராமாயணத்தை நான் புரிந்துகொண்டுவிட்டேன்-அதனை விளம்பிய தங்கட்கு என் நன்றி. இனி நீங்கள் போகலாம்.

[ஈஸ்வரசிவன் ஆத்திரத்தோடு எழுந்து செல்கிறார். கம்பன் மேலும் தொடருகிறான்.]

கம் : (தனிமொழி) அருங்கவிப்புலவீர்! என்னை மன்னியுங்கள்! அறிஞர் பெருமக்களின் இன்கவிகளைக் கேட்டு மகிழ்ந்த உங்கள் செவியில், என்து புன்கவியும் விழ விருப்பதை மன்னியுங்கள்! இனிய யாழோசை கேட்டால் இன்புற்று, பறையொலி கேட்டால் மடிந்துவிடுமாம், அசுணன் என்னும் விலங்கு! இதோ, எனது கவிதை, பறையொலியாக உங்கள் காதுகளில் விழப்போகிறது! அதுவும் பல விகற்பங்கள் கொண்ட விருத்தங்களாகப் பாடப் போகிறேன்! மன்னிக்கும் குணங்கொண்ட மாகவிகள் தமிழ்ப் புலவர்கள் என்பதால், துணிந்தே பாடுகிறேன்! மன்னியுங்கள்!

துறையடுத்த விருத்தத் தொகைக் கவிக்கு
உறையடுத்த செவிகளுக் கோதில்யாழ்
நறையடுத்த வசுணன் மாச்செவிப்
பறைபடுத்தது போலுமென் பாவரோ!

முத்தமிழையும் முறையாகக் கற்றுணர்ந்த உத்தமக் கவிப் பெரியோர்களே! ஒன்று சொல்கிறேன், செவிமடுங்கள். பித்துப்பிடித்தவனும், அறிவற்ற பேதையும், மூடபக்தனும் முறையாகப் பேசமாட்டார்கள். பித்தன், தானாகச் சிரிப்பான் - சம்மந்தமில்லாமல் பேசுவான். பேதை, புரியாமல் விழிப்பான், புரிந்ததாக நடிப்பான். பக்தன், தன்னை மறப்பான்-உளறிக் கொட்டியபடி இருப்பான்! நான் பித்தனல்ல; பேதையல்ல; ஆனாலும் பக்தன்! என் உளறலைப் பொருட்படுத்தாதீர்கள்! ஆராய்ச்சி நடத்தாதீர்கள்!

முத்தமிழ்த் துறையின் முறை போகிய
உத்தமக் கவிகட் கொன்றுணர்த் துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப்பெறுபவோ!

குழந்தைகள், தரையிலே கோடு கிழிக்கின்றன. "இது தனி அறை, இது நாட்டியசாலை" என்று தாங்களாகக் கூறிக்கொள்கின்றன. அதைக் கண்டு கைதேர்ந்த சிற்பிகள் கோபிக்கிறார்களா? இல்லையே! நான் குழந்தை - தரையில் கோடுகள் கிழிக்கிறேன். முறையாகப் படித்தோர் கோபிக்கமாட்டார்கள்...!

அறையு மாடரங்கும் படப் பிள்ளைகள்
தறையிற் கீறிடில் தச்சருங் காய்வரோ!
இறையு ஞானமிலாதவென் புன்கவி
முறையி னூலுணர்ந் தாரு முனிவரோ!

[கம்பன் மேலும் தொடருகிறான்.]

—காட்சி முடிவு—

களம் 19

காட்சி : 19
இடம் : குலோத்துங்கன் தனி அறை.
நேரம் : மாலை.

அரைவழித்திறப்பு

[குலோத்துங்கன் ஒரு சிற்பியுடன் பேசிக்கொண்டிருக்கிறான்.

குலோ : மாளிகைச் சிற்பம் முறைதவறியிருப்பதாகத் தோன்றுகிறது. வலதுகை, மேற்புறம் காணும்போது, இடதுகை, கீழ்ப்புறம் வளைந்தல்லவா இருக்கவேண்டும்?

சிற் : கவனக்குறைவு. மன்னிக்கவும், மாற்றியமைத்துவிடுகிறேன்.

குலோ : விரைவில் நடக்கட்டும். அதுதான் அமராவதியின் கலா மண்டபமாகப் போகிறது!

சிற் : மகிழ்ச்சி அரசே! அழகு ததும்பச் செய்து முடித்துவிடுகிறேன்!

குலோ : சரி! நீ போகலாம்.

[சிற்பி செல்லுதல்-அமராவதி ஆடியபடி வருதல்.]

அம : அப்பா!

குலோ : என்னம்மா!

அம : அவ்வைப் பாட்டியைக் கண்டேன். பேசிக்கொண்டிருந்தேன்.

குலோ : (சிரித்து) நல்லாரைக் காண்பதுவும் நன்றே! நலமிக்க, நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே!

அம : பாடினார்கள்...

குலோ : நீ படித்துக்கொண்டாயா!

அம : இல்லையப்பா!...உம்...நான் கவிதைகள் கற்றுக்கொள்ள வேண்டுமப்பா!

குலோ : அவ்வையாரிடமா? அவர்கள், இன்று இங்கு இருப்பார்கள், நாளைப் பறந்துவிடுவார்கள். தள்ளாத வயதிலும் ஓரிடத்தில் தங்குவதில்லையே! நீ எப்படி...

அம : வேறு யாராவது......

குலோ : ஆய்தேவி...?

அம : கொஞ்சம் முன்கோபி!

குலோ : ஒட்டக்கூத்தர்...?

அம : ரெட்டைத்தாழ்ப்பாள்...தெரியாதா உங்களுக்கு!

குலோ : உம்...சரி! வாணியன்தாதனை நியமிக்கிறேன்!

அம : அது வரண்டகிணறு! தானாகச் சுரக்காது!

குலோ : சரி! வேறு யார் வேண்டும் சொல்!

அம : கம்பர்...

குலோ : இராமகாதை பாடிக்கொண்டிருக்கிறார் பாடஞ்சொல்ல ஓய்வு கிடைக்காது!

அம : இல்லை! அவர் மகன் அம்பிகாபதி!

குலோ : (திடுக்கிட்டு) அம்பிகாபதி! அவன் இளைஞனாயிற்றே!

அம : இருந்தாலென்ன!...அப்பா! உங்கள் மகளை உங்களுக்குத் தெரியாதா?

குலோ : சரி! கேட்கிறேன்......ஏற்கனவே அவன் கொஞ்சம் கோபமாக இருக்கிறான். இணங்குகிறானா பார்ப்போம்!

—காட்சி முடிவு—

களம் 20

காட்சி : 20
இடம் : ஒட்டக்கூத்தன் இல்லம்.
நேரம் : காலை.

[கூத்தன் ஏடுகளுக்கு மஞ்சள் பூசிக்கொண்டிருக்கிறான். சப்தம் கேட்கிறது! திரும்பிப் பார்க்கிறான். அங்கே, வாணியன் தாதன் வந்துகொண்டிருக்கிறான்.]

கூத் : வாடா! புலவா! வா!

வாணி : வந்தேன்! கூத்தரே! வித்து, ஊன்றப்பட்டுவிட்டது!

கூத் . அவரைக்கா புடலைக்கா?

வாணி : அவருக்கும் புடவைக்கும் பொதுவாக!

கூத் : புரியவில்லை!

வாணி : பஞ்சுக்கு நெருப்பு பாடம் சொல்லப்போகிறது!

கூத் : அப்பா புலவா! உன் புலமையை கழகத்திற்கு அனுப்பு! இப்போது புரியும்படி சொல்லு!

வாணி : அமராவதிக்கு அம்பிகாபதி பாடம் சொல்லிக்கொடுக்கப் போகிறானாம்!

கூத் : கொடுக்கட்டும்! கொடுக்கட்டும்! அம்பிகாபதி திறமையாளன், அமராவதி அவனிடம் நிறையக் கற்றுக் கொள்ளலாம்!

வாணி : என்ன! கூத்தரே! இவ்வளவு அமைதியாகச் சொல்லுகிறீர்!

கூத் : ஏன்! உண்மையை எப்படி மறைப்பது! வாணியன்தாதா! நமக்கு அவன் பகை! ஆனாலும் தமிழுக்கு அவன் ஒருவன்தான் உறவு! அடடா! என்ன சொல்வளம் என்ன கவிநயம்!

(பரிதாபமாக) வாணி : ஐயா, கொஞ்சம் இப்படிப் பாருங்கள், நான், எவ்வளவு திட்டங்கள் போட்டிருந்தேன்! அதெல்லாம்....

கூத் : (திரும்பி, நினைவு வந்தவன்போல) ஓகோ! அதைச் சொல்கிறாயா! பைத்தியக்காரா! அவ்வளவுக்குப் போய்விடுமா!

வாணி : போய்விட்டால்......?

கூத் : அவனும் போய்விடுவான்! கண்காணாத இடத்துக்கு! கலங்காதே!

—காட்சி முடிவு—

[அடுத்த இதழிலிருந்து இரண்டு பக்கங்களாக வரும்.]

சிங்காரத் தமிழ்மொழிப் பண்பும்,...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

தோம்" என்று கந்தருவர்போல நீங்கிடாமல் தொடர்ந்து கள்ளக் காதல் நிகழ்த்தி வருவர். இரவில் ஊர்காவலருக்கும், கோழிக்கும், நிலாவுக்கும், தாயுக்கும், நாயுக்கும் அஞ்சித் தலைவன் தலைவியிடம் சென்று இன்பம் கண்டு பிறர் அறியா வகையில் திரும்புவான். அத்தகைய ஓர் நாளில் வைகறையில் கோழி கூவ, வெதும்பும் மனத்துடன் ஒருதலைவி விளம்புவது கேளீர்;

"குக்கூ என்றது கோழி
அதன்எதிர்
துட்கென்றது என்தூஉய் நெஞ்சம்
தோள் தோய் காதலர்ப் பிணிக்கும்
வாள்போல் வைகறை
வந்தன்றால் எனவே"

[துட்கு - அச்சக்குறிப்பு; தூஉய் - தூய, நல்ல; வந்தன்றால்-வந்தது]

இந்த கள்ளக்காதல் மெள்ள மெள்ள ஊரில் உள்ளோருக்கு தெள்ளத்தெளிய தெரியவரும். அவ்வாறு செய்தி அம்பலமாவது தான் அலர், அம்பல் என்று கூறப்படும். "அலரில் தோன்றும் காமத்தின் சிறப்பே" என்று தொல்காப்பியர் நவின்றதுபோல, ஊரார் கண்டு 'கண்டபடி' பேசி ஏசுவது

இன்பழகன், B.A. (Hons.)

கேட்டு காதலர் நேயம் நிறைந்து வளருமேயன்றிக் குறைந்து தளராது. "ஊரவர் கெளவை எருவாக அன்னை சொல் நீராக நீளும் இந்நோய்" என்பது குறள் தலைவியின் கூற்று (கெளவை-பழமொழி)

இவ்வாறு கள்ளக்காதல் நடாத்திய இருவரும் பின்பு நாடறிய திருமணம் புரிவர். களவுக்காதல் பிறர் கண்டறிந்த பின்புதான் கற்புக்காதலாக மலர வேண்டும் என்றில்லை.

"வெளிப்பட வரைதல், படாமை வரைதல் என்று ஆயிரண்டென்ப வரைதலாறே" என்ற தொல்காப்பியர் விதிப்படி, களவு பிறர் அறியா முன்பும் கற்பாக கனிவதுண்டு என்பது கருத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும்.

கற்பியலின் சில பண்புகளைப் பார்ப்போம். மணம் முடித்ததற்குரிய பெண் வீட்டார் தர, மணமகளை ஏற்பது கற்பு எனப்படும் என்பதைத் தொல்காப்பியர்,

"கற்பெனப்படுவது கரணமொடு
புணரக்
கொளற் குரிமரபின் கிழவன்
கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர்
கொடுப்பக் கொள்வதுவே"

[கரணம் - மணச்சடங்கு; கிழவன் - தலைவன்; கிழத்தி-தலைவி]

என்று இயம்பியுள்ளார். முன்னர் கனவியல் கள்ளக்காதல் நடாத்திய போது, கற்பாக மலரவேண்டி மணம் முடிக்கவேண்டிய வேளையில் பெற்றோர் '144' (தடை) விதிப்பதும் உண்டு. அப்போது காதலர் இருவரும் ஊரைவிட்டு வெளியேறி மணம் செய்துகொள்வர். இன்றும் தான் இது உண்டே! இதையே தொல்காப்பியர்,

"கொடுப்போர் இன்றியும்
கரணம் உண்டே
புணர்ந்துஉடன் போகிய
காலையான"

என்ற விதியில் விளக்கினர். இதுகாறும் இயம்பியவற்றால் தமிழர் காதல் முறையில் களவுக்குப்பின் கற்பு தவறாது இடம்பெறும் இன்றியமையாத இயல்பு என்பது புலனாகும். ஆனால் ஆரியர் கந்தருவம் அவ்வாறன்று என்பதும் ஆராய்ந்து காட்டப்பெற்றிருக்கிறது.

இறுதியாக, வடமொழியில் விளம்பப்பட்டுள்ள கந்தருவர்யாவர் என ஆராய்தல் நலமாகும். கந்தருவர் இமயமலைச் சாரலில் வாழும் அழகிய தோற்றமும் தளர்ந்த ஆண் பெண் ஒழுக்கமும் உடைய ஒரு கூட்டத்தினர் என்று வைத்தியா என்னும் ஆசிரியர் "இராமாயணத்தின் சிக்கல்கள்"

எனும் நூலில் கூறியுள்ளார். இசையும் கூத்தும் பரப்பும் ஆடல்பாடல் கலைஞராய் கட்டுப்பாடற்ற காதல் முறையுடன் வாழ்ந்த கூட்டமே கந்தருவர் என்பது பெறப்படும். இத்தகைய கயமைத்தனமான கடையருக்கு தேவ இயல்பைக் குறிக்கும் கந்தருவர் என்ற பெயர் எப்படி இயைந்தது என உய்த்துணர எண்ணும் போது, திருவள்ளுவர் துணை செய்கிறார். தேவர்களுக்கு வரையறை, கட்டுதிட்டம் என்ற ஒருமுறை இடையாது. காமதேனு, கற்பகவிருட்சம் என்று அவர்கள் கற்பனையில் கட்டிக்கொண்டதெல்லாம் நினைத்ததை நிகழ்த்தி இன்புறவேண்டும் என்ற கட்டற்ற ஆவலையே காட்டும். கயவர் கருதியதை காரியமாக்கிக் களிப்பெய்துவது போன்றதே தேவர் தொழிலும் என்ற குறிப்பில்

"தேவர் அனையர் கயவர்
அவரும்தாம்
மேவன செய்தொழு கலான்"

என்று கூறியது எண்ணி மகிழத்தக்கதாகும்.

"மனம்போன போக்கில்
போகவேண்டாம்"

என்ற முதுமொழிக்கு மாறாகவும், "சென்ற இடத்தில் செலவிடாது தீதுஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்ற குறளுக்கு வேறாகவும் பண்பற்ற முறையில் வாழ்வதே "கந்தருவம்" என்பது அறியப்படும். ஆனால் "களவு" பின்னர் கற்பாக கனிவதால், அரும்பு, பின்னர் மலர் ஆகி மணம் பரப்புவதுபோல, பிறை பின்னர் நிறைவாகி நிலாவாக ஒளி செய்வது போல, சீரிய பண்பாட்டின் நேரிய நாகரிகம் என்பதை நினைவில் இருத்திக்கொள்ளவேண்டும்.

விற்பனையாகிறது!
ஈ.வி.கே.சம்பத் எழுதிய முடிசாய்ந்தது 1-4-0
வி.சிவப்பிரகாசம்.பி.ஏ. எழுதிய முசோலினி 0-10-0
நிலா நிலையம், 2/127. மவுண்ட்ரோடு, சென்னை-6

வள்ளுவன் மூத்தோன்!

பெண்மை கொடிபோன்றது; ஆண்மை, வலிவுமிக்கது. ஆனால், காதல் உணர்ச்சியில், ஆண்மையை அடக்கிச் சிறைப் பிடித்து, மடக்கி மடியிற் போட்டுக்கொள்கிறது பெண்மை. மன வலிவை முழுதும் இழந்து விடுகிறது ஆண்மை.

புதிதாக, முதன்முதலாக, ஒரு ஆடவன் விழிகளும் பெண்ணின் விழிகளும் சந்திக்கும்போது, பெரிய போர் ஒன்று நடைபெறும். அது, சேரன் செங்குட்டுவன் வடதிசைப் போர்போல சீக்கிரம் முடிந்துவிடும். ஆண்மை தோற்றுவிடும், பெண்மை வென்றுவிடும். பெண், ஆணின் இதயத்தில் தானாக சடக்கென்று புகுந்துவிடுவாள். ஆனால், ஆடவனைத் தன் இதயத்துக்குள், காற்கட்டு கைக்கட்டுக் கட்டித் தூக்கிப் போட்டுக்கொள்வாள். இது தான் கவிநயத்தோடு கூறப்படும் இயற்கை விதி. இருவரும், ஒருவர் இதயத்தில் மற்றவர் சமமாகப் புகுந்துகொள்வதாகக் கூறுவது கவி உணர்ச்சி இல்லாத கற்பனை! பெண்மையின் பெருஞ்சிறப்பை அறியாத கூற்று!

கம்பனார்--இராமகாதையில் அதைக் காட்டுகிறார்--அதாவது மரக்கட்டைக் கற்பனையை!

இராமன் விழிகளும் "சீதாபிராட்டி"யின் விழிகளும் சந்திக்கின்றன. இருவர் உள்ளமும் ஈர்த்தலால், மாறிப் புக்கு இதயமெய்துகிறார்கள்! பெண்ணின் விழிக்கோணத்துக்கும் ஆடவன் பார்வைக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கிறான் கம்பன்! பெண்மைக்குக் கொஞ்சங்கூடத் தனித்தன்மை இல்லாத அது இது:

பருகிய நோக்கெனும் பாசத்தாற்பிணித்து
ஒருவரை ஒருவர் தமுள்ளமீர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதயமெய்தினர்

— மிதி. கா. ப. 37 —

இருவரும் பார்த்ததும்--முதன்முதலாக நான்கு விழிகளும் சந்தித்ததும்--பார்வை கயிறாக வந்து பிணித்து, இதயத்தை மாற்றிப் போட்டுவிட்டுப் போய்விடுகிறது!

--இது, பதினாறு சீர்களில் கம்பனார் கைவண்ணம்.

'எழுசீர் வீரன்' வள்ளுவனைப் பார்ப்போம்.

அவள் அவனைப் பார்க்கிறாள். அவன் அதற்கு எதிர்ப் பார்வை பார்க்கிறான்!--சீதா ராமரிடம் கம்பனார் கண்ட அதே நிலை!--ஆனால், இங்கே விளைவு என்ன? அவள் தானாகத் தாக்கியது போய்--எதிர்ப்பார்வை மூலம் அவளது கண்களில் ஒரு சேனை உருவாகி அதுவும் வந்து அவனைத் தாக்குகின்றன! சாகச அணுவை நேரடி அணு தாக்கியதும் சாகச அணு பல கூறாகப் பிரிந்து ஒவ்வொன்றும் முழு உருவம் பெற்று வந்து தாக்குகின்றன! இதுதான் காதல் விஞ்ஞானத்தின் ஆராய்ச்சிப் பங்கீடு! இப்படித் தாக்கிப் பார்த்து, சாகச அணுவிடம் தோற்ற சராசரி மனிதர்களுக்கு இது புரியும்! கம்பனாருக்கு இது புரியாது! காரணம் அவரது கதாநாயகி பெண்தன்மை உடையவளல்ல--ஆண்தன்மை உடைய பெண்! ஆரியப் பத்தினி!

வள்ளுவன் காண்பது திராவிடப் பத்தினி! ஆகவே இயற்கை நிலை கவிநயத்தோடு பூரணம் பெற்றுப் பிரகாசிக்கிறது!--அதுவும் ஏழே சீர்களில்!

அது இது:

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து!

— 1082 —

பதினாறு சீர்களைப் பாழாக்கி, ஆண்மைக்கும் பெண்மைக்கும் பேதமில்லாமற் செய்துவிட்டான் கம்பன்.

ஏழே சீர்களில் பெண்மையின் பெருஞ்சிறப்பைப் பட்டாளமாக்கிக் காட்டுகிறான் வள்ளுவன்!

கண்ணதாசன்.



வி. ரங்கதுரை, சென்னை-5.

சென்ற வாரம், கடற்கரையில் தோழர் குருசாமி பேசினாரே, கேட்டீரா?

அம்மைக்குக் கூஜாத்தூக்கும் பொம்மைகளின் உளறலை நான் கேட்பதில்லை. கேட்டுவந்தவர்கள் சொன்னார்கள்.

“ தி. மு. க. தலைவர்கள் எந்தெந்த வீட்டுக்குப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியும்!” என்று, அந்தக் கூட்டத்தில் குருசாமி சொன்னாரே!

ஆமாம்; அவர்கள் போகும்போது இவர்தான் ஒரு கையில் விளக்கும், மறுகையில் சொம்பும் கொண்டு போனார்!

“ தி. மு. கழகத்தார், சினிமாவுக்கு எழுதுவதெல்லாம், குத்தூசியிலிருந்து எடுத்தது” என்றாரே!

எவ்வளவு பசி எடுத்தாலும், நாய் கக்கியதை மனிதன் தின்னமாட்டான் என்று அவருக்குச் சொல்லும்!

அண்ணாத்துரைமீது குருசாமிக்கு ஆத்திரம் வருவானேன்?

அண்ணாவிடத்திலே லட்சோபலட்சம் பகுத்தறிவுள்ள மக்கள் அன்பு செலுத்துவதும், குருசாமியைக் குறைந்தபட்சம், ஒரு ‘வெள்ளி மூக்கு’கூடச் சீந்தாததும்தான் காரணம்!

சினிமாவினால், மாம்பலத்தில் நாலு வீட்டுக்கு ஒரு வீடு விபசார விடுதியாக இருப்பதாக குருசாமி சொன்னாரே!

சபாஷ்! அவர் எடுத்த சென்ஸஸ் பிரமாதம்! ஆனால் இந்தக் கணக்கு, இரவில் எடுக்கப்பட்டதா, பகலில் எடுக்கப்பட்டதா என்பதை, குருசாமியையும், அவர் கூட்டிச்சென்ற மைனரையும், அவர்களை ஏற்றிச் சென்ற டாக்சியையும்தான் கேட்க வேண்டும்!

தென்றலின் தலையங்கம் பற்றிக் குறிப்பிட்டாரே!

யார்? குருசாமியா! அடடாவோ அடடா! அந்தர்பல்டி சுந்தரரூபன் அதை வேறு குறிப்பிட்டாரா! விஷயத்தைக் கேளும். “இந்திக்கமிஷன் இந்தி பற்றிய கருத்தை எதிர்ப்பாளர்களிடமும் அறிய விரும்புவ”தாக தேசீயப்பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்தன. வேண்டுமா வேண்டாமா என்று அறிய வருவதானால், சாட்சியம் சொல்வது சரிதான் என ஆசிரியர் கருதி, எண்ணத்தில் அதைப் பிரதிபலித்தார். “இல்லை. எப்படிப் புகுத்துவது என்று ஆராயவே வருகிறது” என்று தெரிந்ததும், தம் கருத்தை மாற்றிக்கொண்டார். இதிலென்ன தவறு! கமிஷனின் நோக்கத்தை, முதலில் புரிந்துகொண்டவிதம் தவறு என்றுஅவரே ஒப்புக்கொண்டாரே! ஏழாந்தேதி, கம்யூனிஸ்ட் கட்சியை ‘அற்புத மருந்து’ என்றும் எட்டாந்தேதி, அதே கட்சி, “பரம விரோதி” என்றும் ஒன்பதாந்தேதி, காங்கிரஸின் பின்னால் ஓடியும், பத்தாந்தேதி, “இல்லை காமராஜின் பின்னால் மட்டும்தான் போகிறோம். என்றும், பதினோராம் தேதி,” கொடியை எரிப்போம் என்றும், பனிரெண்டாம் தேதி வாபஸ்பெற்றும், மணிக்கு மணி ஒரு தலைவர் கருத்தை மாற்றிக்கொள்ள அவரைப் பின்பற்றும் கூஜாசாமி, அவ்வப்போது ஜாலராவை மாற்றித் தட்டும் கேலிக்கூத்தைப்போல அல்ல இது! நாளைக்கும், “வேண்டுமா வேண்டாமா?” என்பதை அறிய ஒரு கமிஷன் வருமானால், சாட்சியம் சொல்லலாம் என்பதே ஆசிரியர் கருத்து! முன்னேற்றக் கழகத்துச் சனநாயகத்தில், இப்படி ஒரு மாற்றுக் கருத்தைச் சொல்வதில் ஆபத்தில்லை. பெரியாரைப் போல, “இவனைக் கூப்பிடாதே, கூட்டத்திற்கு! இவன் துரோகி” என்று அறிக்கை விடமாட்டார், தி. மு. க. தலைவர், “சரி; இந்தத் தம்பி இப்படிச் செய்கிறான்; விளக்கம் சொல்லுவோம்; கருத்தைக் கேட்போம்!” என்னும், முழுமை பெற்ற சனநாயகவாதி, தி. மு. க. தலைவர். அவரைச் சார்ந்த தம்பிமார்களின் குணமும் அதுதான். “தென்றல் தெரிவித்த கருத்து எந்த வகையில் சரி?” என்று ஆராய்வார்களே தவிர, “தலைவர் கருத்துக்கு மாற்று!” என்று காயமாட்டார்கள். மேலும், “எப்படி புகுத்துவது” என்று கேட்க வரும் கமிஷன் முன்பு சாட்சியமளிக்கு மாறு முதல் தலையங்கத்தில் கூறவே இல்லை, “வேண்டும் என்பதைக் காட்டிலும் வேண்டாமென்பதற்குக் காரணங்கள் மெத்த உண்டு” என்று அதே தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். விபரம் தெரிந்தபோது, கருத்தை மாற்றிக் கொண்டார். அது, கழகப் பொதுச் செயலாளரின் கருத்துக்கு உடன்பாடான கருத்தாகவும் இருந்தது! இதுதான் நடந்தது. இதை அந்தக் கூஜாசாமிக்கு அடித்துச் சொல்லுங்கள். கொஞ்சம் பலமாகவே தட்டிச் சொல்லுங்கள், ஏனென்றால், பெரியாரிடம் உதை வாங்கி வாங்கி, அவருக்கு எருமைக் குணமே வந்துவிட்டது! நாம்தான் பார்த்தோமே அந்தவேடிக்கையை! முதல்நாள் இந்தக் கூஜா எழுதும் தலையங்கத்தை மறுத்து மறுநாள் ஐயா எழுதுவார், அது மட்டுமன்றி, பெரியார் அவர்கள், “என்னைப் பற்றி” என்ற தலைப்பின்கீழ் எழுதியிருந்த கருத்தை சமீபத்தில் படித்தவர்கள், “குருசாமி இன்னும் உயிரோடிருக்கிறாரா?” என்று தேடவே ஆரம்பித்தார்கள். ஏனென்றால், ஐயா, கூஜாசாமியைக் குடைந்து எடுத்திருந்தார். மானமுள்ளவர்கள் என்ன செய்வார்கள்! அதைக் குருசாமி செய்யவில்லை! அதனால்...சரி; வெளிப்படையாகச் சொல்வானேன்!

குருசாமி பெரியாரிடம் என்ன வேலை பார்க்கிறார்?

நியாயமான சந்தேகம்தான்! ஆனாலும் என்ன மனிதரய்யா நீர்! ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டாமா! அவர் பெரியாருக்கு இடதுகை ஐயா! (தயவு செய்து, இடதுகையின் உபயோகம் பற்றி ஆராயவேண்டாம், அதோடு,...... துவைப்பது, கூஜாத் தூக்குவது முதலியன தினசரிக் கடமைகள்! சில சமயங்களில் அவர் பேனாப் பிடிப்பதும் உண்டு:

“சர்வாதிகாரமே தேவை!” என்று, அதே கூட்டத்தில் “டார்ப்பிடோ” சொன்னாரே! அது...

மேய்ப்பவன் தேவை என்று மாடு சொல்வதுபோல!

பெரியார், “எனக்கு முட்டாள்களே தேவை!” என்று முன்பு சொன்னாரல்லவா?

சொன்னார். அதனால்தான் அதை நிரூபிக்க குருசாமி அங்கேயே தங்கி விட்டார்!

கே. ராமசாமி, சூளை.

“கண்ணதாசனுக்கு சவால்” விடுகிறாரே, “நொந்துபோனவர் கழகத்து ஆசாமி ஒருவர்; இதுபற்றி உமது கருத்து என்ன?

இதுபற்றி, ஆசிரியரிடம் கேட்டதில் அவர் சொன்னது இது: “நான், ஒரு தலைவரை விவாதிக்க அழைத்தேன், அவரது கொடுக்கு “நான் வருகிறேன்” என்கிறது! (ஆமாம்; மற்றக் கழகங்களில் தலைவர் கூடத் தொண்டர்கள் இருப்பார்கள். ‘அவர்’ பக்கம் சில அதுகள்தான் இருக்கின்றன!) விளம்பரமில்லாத சில சாதாரணங்கள், நம்மோடு மேடை ஏறுவதன்மூலம் நாலு பேருக்கு அறிமுகமாக முயற்சிக்கின்றன! அதை எப்படி அனுமதிப்பது! சிவஞானமா? வரட்டும்! அவர், நாலு பேருக்கு அறிமுகமாகித் தொலைந்தாலும் கவலையில்லை! அவர் “நிரட்சரகுட்சி” என்பதை நிரூபிப்பதுதான் என் ஆசை! இதுபோன்ற ஏனோதானோக்களை நம் பக்கத்தில் மேடையில் ஏற்றுவதே தவறு! இதைக் காட்டிலும் உயர்ந்தவர் என்று இதுவே கருதிக்கொண்டிருக்கும் ஒருவரைத்தானே நான் அழைத்தேன்? அறிவிலே “மிகவும் சிறியது”களோடு எப்படி மேடையேறுவேன்! சிவஞானத்தை அனுப்பு! ஓரளவு, அதுமுறை! எனக்கு, ஜான்சனின் இறுமாப்பு உண்டு. காரணம், நான் கண்ணதாசன் என்பதால்அல்ல-அண்ணாத்துரைக்குத் தம்பி என்பதால்! முன்னேற்றக் கழகத்தான் என்பதால்! லட்சோபலட்சம் சகோதரர்களை உடையவன் என்பதால்! நம்மைப் பார்க்க-கேட்க, வரும் ஆயிரக்கணக்கான நம் சகோதரர்களுக்கு, “இதோ! இப்படி ஒருவர் இந்த உலகில் இருக்கிறார்!” என்று எப்படி “இதனை” அறிமுகப்படுத்த ஒப்புவேன்! போனால் போகிறது; சிவஞானத்தை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்-வரட்டும்!

தலைமைக் கழகம்: அறிக்கை 25-55

தி. மு. கழகமும் நகரசபைத் தேர்தலும்

ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் அரசியல் கட்சிகள் போட்டியிடவேண்டிய அவசியமில்லை என்ற கொள்கையை ஒட்டி, வரும் நகர சபைத் தேர்தல்களில் தி. மு. கழகம் கட்சி அடிப்படையில் பங்கு கொள்ளாது.

தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்கள், கழகத்திற்கும், கழகக் கொள்கைகளுக்கும் களங்கம் ஏற்படாத வகையில், தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் நகரசபைத் தேர்தலில் போட்டியிடலாம்.

தி. மு. கழகத்தின் மூலாதாரக் கொள்கைகளைப் பொறுத்து மாறுபட்ட கருத்துடைய எந்த அரசியல் கட்சியோடும் தி. மு. கழகத் தோழர்கள் இணைந்து நின்றோ அல்லது கூட்டாகச் சேர்ந்தோ தேர்தலில் போட்டியிடக் கூடாது.

தி. மு. கழகத் தோழர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரே யிடத்தில் போட்டியிட முனைந்தால், அந்த இடத்திற்குரிய தி. மு. கழகக் கிளை தலையிட்டுக் கழகத் தோழர்களுக்குள்ளே ஏற்படும் போட்டியைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேர்தலில் போட்டியிடும் தி. மு. கழகத் தோழர்கள், கூடுமானவரையில், கூட்டணி போன்ற அமைப்புகளில் இணைவதைத் தவிர்த்துத் தனிப்பட்ட முறையில் போட்டியிட முயலல் வேண்டும்.

கட்சி ஆதிக்கத்தை எதிர்க்கக் கூட்டணி எங்கேயாவது அவசியப்படுமாயின், போட்டியிடும் தி. மு. கழகத் தோழர்கள், போதுமான விளக்கம் தந்து, அதற்கான தலைமைக் கழகத்தின் அனுமதியைப் பெறலாம். கூட்டணி, தனிப்பட்ட முறையில் போட்டியிடுபவர்களின் கூட்டணியாக இருக்கவேண்டுமே ஒழிய, கட்சிகளின் கூட்டணியாக இருக்கக்கூடாது.

எந்தத் தி. மு. கழகக் கிளையும், ‘தேர்தலில் யாருக்கு வாக்கு அளிப்பது’ என்று முடிவு எடுக்கக்கூடாது. வாக்கு அளிப்பது என்பது, அவரவர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்கு விடபட வேண்டியதொன்றாகும். பொதுவாக, கட்சியின் பெயரால் போட்டியிடுபவர்களுக்கு ஆக்கந்தர வேண்டாம்.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் தி. மு. கழகத் தோழர்கள், கழகத்தின் கொள்கைகளுக்கு ஊறு ஏற்படாத வகையிலும், மேலே கூறப்பட்ட கருத்துக்களுக்கு மாறுபடாத வகையிலும், தனிப்பட்ட முறையில் பணியாற்ற வேண்டும்.

“அறிவகம்,”
சென்னை.
12-8-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்.

நெஞ்சிலே யிட்ட நெருப்பு

வெண்பாப் போட்டி 13-க்கு வந்த வெண்பாக்களில் சென்ற இதழில் 22 வெண்பாக்கள் வெளியாயின. இந்த இதழில் 44 வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம். மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வெண்பாக்களை இடமின்மையால் வெளியிடவில்லை. அவற்றை எழுதியோர் பெயர்கள் மட்டும் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளன :--

(1) பண்பு, பாகுமொழி, பாகனேரி. (2) புலவர் ஏகாம்பரம், திண்டிவனம். (3) ச. சீ. அ. ச. கோம்பை. (4) கி. சீத்தாராமன், கரிகாலீ அஞ்சல். (5) செல்வதாசன், க. தோ. தெரு, சென்னை-1. (6) பத்மதாசன், மதுரை. (7) கே. மல்லையா, 5-5-9 சவுண்டம்மன் தெரு, அருப்புக்கோட்டை. (8) அ. செழியன், சிங்காரத்தோப்பு தெரு, திருச்சிராப்பள்ளி. (9) எஸ். ஆர். கோவிந்தராசன், குன்றத்தூர், (Via) பூந்தமல்லி. (10) பா. சு. அ. குணசீலன், பாலையம்பட்டி அஞ்சல். (11) ந. மு. விசுவநாதன், 6, கச்சேரித்தெரு, அரக்கோணம் (12) ஆலம்கிர், சமால் முகமது கல்லூரி, திருச்சி. (13) பழ. நடராசன், 12, நைனியப்பன் தெரு, சென்னை-1. (14) சுப. திண்ணப்பன், அழகப்பா கல்லூரி, காரைக்குடி. (15) கா. முத்துக்கருப்பன், இராமச்சந்திரபுரம் அஞ்சல். (16) க. எ. சிதம்பரம், 12, சோலையப்பன் தெரு, சென்னை-21 (17) கே. கடவுள், எக்கல், கீழ்ப்பாண்டி அஞ்சல். (18) பா. சோமசுந்தரம், பெருமாள்செட்டி சந்து, திருமலாபுரம். (19) இளங்கோதாசன், இரகுநாதபுரம், ஆரணி. (20) அ. ரா பொன்னையா சி. எம். எஸ். உயர்நிலைப்பள்ளி, திருவில்லிபுத்தூர் (21) பொ. நாராயணன், தெற்குசீரங்குடி, கோட்டார். (22) கி. இர்ராசாராமன், தழுதாளி, மயிலம் அஞ்சல் (23) க. மீ. சுந்தரம், வடகுடி, சூரனூர். (24) சகுந்தலா, டி-3 விவசாயக்கல்லூரி, கோவை. (25) தீ. க. அரங்கசாமி, அணிகலஅங்காடி, நம்பியூர். (26) அ. பொன்னுசாமி, கேர்பட்டா எஸ்டேட், கோத்தகிரி. (27) சோம. தமிழ்ப்பிரியன், புதுவளவு, பாகனேரி. (28) எ. எஸ். பழனிச்சாமி, ஓ. கொண்டாலம்பட்டி. (29) கு. சு. நடராசன், குளத்துப்பாளையம், தொண்டாமுத்தூர். (30) ரா. அங்கமுத்து, மதுரை. (31) பி. எம். எஸ். கௌரம்மாள், பெருமாள்குப்பம், கண்ணுண்டஅள்ளி. (32) கு. முருகார் மொழியன், 38, விசாலாட்சி விடுதி, அழகப்பா கல்லூரி, காரைக்குடி. (33) கே. எம். இரத்தினம், சந்தானப்பள்ளி, அஞ்சூர். (34) எஸ். வெற்றி விழைஞன், ஜி. சி. டி. விடுதி, ஆர். எஸ். புரம், கோவை. (35) ஆரோக்கியம். கம்பம். (36) எ. ராஜகோபால், பேராம்பட்டு. (37) ''மணியன்பன்'', ஈசாப்பள்ளி வாசல், இராமநாதபுரம், (38) பொ. இரா. தமிழ்ப்பதி, அதையூர். (39) பி. எஸ். மாரிமுத்து, 19-28 முத்தண்ணன் குளம்வீதி, கோவை. (40) க. கா. செங்கோடன், கவுந்தப்பாடி, ஈரோடு. (41) அ. ந கிருஷ்ணசாமி, பூண்டுலோயா, இலங்கை. (42) ஜே. பிச்சையா, டி. மீனாட்சிபுரம், திருநெல்வேலி. (43) தெருப்பாடகன், தாராவி, பம்பாய். (44) த. அறமுதல்வன், ம. தி. தா. கல்லூரி, நெல்லை. (45) தென்காசி வே. கோவிந்தராஜுலு, அமிர்தநகர் காலனி, தாம்பரம். (46) பாரதிநேசன், 17, சிங்கம்மாள் வீதி, சென்னை-21 (47) சிவசுப்பிரமணியன், 18, பெரியகன்னாரத்தெரு, மாயவரம். (48) காப. இரான், சிங்காரத்தோப்பு, திருச்சி. (49) கு. இளமுருகு, 15-7-31 அழகாபுரி தெரு, அருப்புக்கோட்டை. (50) வி. சே. நடராசன், முகலிவாக்கம் பெரிய தெரு, சென்னை-16 (51) மு. முகம்மது அலி, 40, காசியார் வீதி, காரைக்கால். (52) வீ. பாலசுந்தரம், 16, தெற்குத் தெரு, அருப்புக்கோட்டை.

2 வது தரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள்:-

(1) எம். செயலட்சுமி. மெக்கபுளூர் (2) சு. தமிழரசு, சிங்கபுரம். (3) முதுகண்ணன், 126, தூய்ப்ளேக்ஸ் தெரு, புதுச்சேரி (4) ந. பிச்சைமுத்து, பழையவளவு, பாகனேரி. (5) தியாகை வில்லாளன், குறளகம், பசனைக்கோவில் தெரு, தென் தியாகராயநகர், சென்னை-13. (6) பழ. ஆவிடையப்பன், சண்முகம் ஸ்டோர், பட்டுக்கோட்டை. (7) அ. இராமசாமி நம்பியூர். (8) மு. பெ. முத்துக்கருப்பன், தாத்தையங்கார்பேட்டை. (9) ரா. கணேசன், தாழைமேடு, திருக்கழுக்குன்றம். (10) மு. சண்முகம், பள்ளத்தூர். (11) ஆ. வே. சாத்தூர்சாமி, ஆலடிப்பட்டி, வெள்ளாகுளம் அஞ்சல் (வழி) கோவில்பட்டி. (12) கே. எஸ். மாணிக்கம், அரசர்கல்லூரி, சிவகங்கை (13) மா. அரங்கநாதன், அரசியலார் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கோவை (14) மெய்யன்பன், இலயோலா உணவுவிடுதி, சென்னை (15) வ. தமிழ்மணி, செங்குந்தர் மகாஜனப்பள்ளி, தாராமங்கலம், (16) மு சீ. வெங்கடாசலம், சூசையப்பர் கல்லூரி, தெப்பக்குளம், திருச்சி. (17) எம். வி. ராசு, நாகமலை புதுக்கோட்டை, நாகமலை. (18) அ. ச. பானு, செயலாளர், தி. மு. க. பொள்ளாச்சி. (19) மு. வச்சிரவேலன், பூங்காநகர், சென்னை-3. (20) மன்றத்தோழன், மீனாட்சிபுரம், போடி நாயக்கனூர், பெரியகுளம், மதுரை. (21) தி. நாராயணன், 26, வடக்குசித்திரை வீதி, மதுரை. (22) எஸ். செல்லப்பன், 133, இராமநாதபுரம் ரோடு, மதுரை. (23) பா, ராமமூர்த்தி, 4, செங்குளத் தெரு, திருமங்கலம். (24) இ ரெ. தங்கையா, பி. ஏ., எஸ். ஆர். வித்தியாலய அஞ்சல். (25) க. ப. இராமானுசம், 20, வடக்குவடுகத்தெரு, சிதம்பரம். (26) இரா. கருப்பையா, கந்தர்வகோட்டை. (27) ந. சின்னமணி, திருச்சி. (28) கவியரசு, திருத்துளார். (29) இராச. மாரப்பா, 72, கான்பாளையம் 2 வது தெரு, மதுரை. (30) மா. சண்முகம், புலவர் நிறைவு நிலை, அரசர்கல்லூரி, திருவையாறு. (31) டி. என். அர்ச்சுனன், 73, சாமிபிள்ளை தெரு, சென்னை-7 (32) செ. குமரவேல் முகமதிய கல்லூரி, வாணியம்பாடி, (33) செ. பானு, 1-18, காட்பாடி ரோடு, வேலூர். (34) இராசம்—சேங்காலிபுரம் (35) து, திருநாவுக்கரசு, அரியநாச்சி, கழுதூர் அஞ்சல். (36) வெ. வெங்கடசாமி, சமதர்ம தையல் நிலையம், பாலையம்பட்டி, இராமநாதபுரம். (37) சொ. வள்ளிதாசன், அப்பிபட்டி அஞ்சல், சின்னமனூர் (Via) (38) வ. நடராசன், 25, பார்த்தசாரதி பேட்டைத் தெரு, வெள்ளாளத் தேனாம்பேட்டை, சென்னை-6. (39) ச. மருதமுத்து, ஆசிரியர், 39, நெல்லுக்கடைத் தெரு, உடுமலை. (40) சுப இளங்கோவன், 306, தங்கசாலைத் தெரு, சென்னை-1 (41) மலையரசன், 10, வளையல்காரத் தெரு, ஆரணி. (42) தி. ந. அருச்சுனன், குமாரசாமி தெரு, திமிரி. (43) சீகரசன், குடியரசு மாணவர் விடுதி, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி. (44) மு. சித்திமகமுதா பேகம், 40, காசியார் தெரு, காரைக்கால். (45) வேங்கடராசன், 170 சாத்தாரவீதி, சீரங்கம். (46) சுப. மணிமொழியன், தேமொழி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர். (47) அ. ஆதிநாராயணன், செட்டியாரகரம், நாம்பல் அஞ்சல் (48) மு. பலராமன், 10, கசபதிநாயுடு தெரு, ஷெணாய்நகர். (49) வ, சி. வீரப்பெருமாள், கோவிலூர், கண்டர்கோட்டை அஞ்சல். (50) வெ. சு. சுப்பையா, குடியரசுமாணவர் விடுதி, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி, (51) சீரான், திருவள்ளுவர் நிலையம், கோம்பை. (52) கே. எஸ். சுப்பையா, 29. வெள்ளந்தாங்கி தெரு, திருநெல்வேலி. (53) மேலை இந்திரா, அறிவொளிர் இல்லம், கல்லுப்பட்டி, (54) எ. கே. ரங்கராசன், சாலைத் தெரு, அய்யம்பேட்டை. (55) வே. அர. சைலவாசன், 57-3 ஆரணிசாலை, சுப்பிரமணியபுரம். (56) மலைவாணன், மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை வழி.

வேலங்குடித் திருவிழா

ஏஜண்டுத் தோழர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைப்பு !

''விளம்பரம் செய்ய காலம் வேண்டும்'' என ஏஜண்டுத் தோழர்கள் எழுதியிருப்பதால் 'வேலங்குடித் திருவிழா' தொடர்கதை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

1-10-55 இதழில் துவங்கும் !

கண்ணதாசன்.

மாநில மாநாட்டு நிதிக்கூட்டம்

இடம்:- சென்னை, கோகலேமண்டபம்

காலம்:- 21—8—55 ஞாயிறு காலை 1[illegible]-மணிக்கு

தோழர் முல்லைசத்தி அவர்கள் தலைமையில்

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள்

''ஜூலியஸ் சீசரும், ஜோனப்ஆர்க்கும்'' என்பதுபற்றி பேசுவார்.

நன்கொடை :- 0-8-0, 0-4-0 அணா.

சென்னை மாவட்ட தி. மு. க.

வெண்பாப் போட்டி 13...

(12-ம் பக்கம் தொடர்ச்சி)

வாழ்விற் கிலக்கணத்தை வாழும் உலகறியாப்
போழ்திற் படைத்துப் புகழ்பெற்ற,--தாழ்வில்லாச்
செஞ்சொல் தமிழுக்குச் சீரழிந்த இந்திமொழி
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—இரா. வை. எழில்வழுதி, இராங்கியம்.

★

அஞ்சி நெறிமாறும் ஆண்மையும் ஆசையினால்
வஞ்சித் தொழுகிடும் வாய்மையும்--மிஞ்சியபின்
கெஞ்சி கலங்கிடுவோர் கேண்மையும் நல்லோர்க்கு
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

ல. சேதுராமன், கரூர்.

★

நம்முன்னோர் வானரராம் தார்வேந்தன் கோழையாம்
அம்மட்டோ? ஆரியரை வீரரெனும்--கம்பனது
நஞ்சேட்டைத் தங்கமென்போர் தீச்செயலே நல்லோர்க்கு
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—பி. ஏ. காசிமலை, சின்னமனூர்.

★

பட்டத்தைக் காணப் படித்தான் இனிவேலை
கிட்டுமா என்று கிளம்பினான்--பட்டதெலாம்
சஞ்சலமே! 'இல்லை'த் தனிப்பாட்டே, நல்லிளைஞன்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—பழ. அருணாசலம். சென்னை-24.

★

கண்மணியே! கற்பகமே! கற்கண்டே! கண்டிடுநல்
விண்மணியே! விற்கொடியே! என்றதெல்லாம்--[தண்மதியாம்
வஞ்சியேநீ வாயால் வைவதற்கோ? ஈங்கிதுவென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—வீ ரா. நடராஜ பிள்ளை, ஆலூர்.

★

பாழுஞ் சமுதாயம் பதிவிரதைக் கதைபேசும்
வாழும் வனிதைக்கு வாழ்வில்லை;--தாழ்வேயோ?
பிஞ்சுக் கரந்தொட்ட பேதையவன் விட்டஉயிர்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—க. ஆ. கோவிந்தன், கந்தர்வகோட்டை.

★

சிந்தனையைச் சுட்டுச் செழுந்தமிழார் வத்தியை
முந்திப்போய் மூச்சடக்க மூளுதடா--இந்திப்பேய்
வஞ்சியவள் கொஞ்சி வந்துவந்து தென்னகத்தார்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—தி. அ. பார்வதி, சங்ககிரிதுர்க்கம்.

★

சாதி சமயம்விதி, தாழ்வுயர்வு, மூடமதி,
ஓதில் வறுமைவளர் உட்பேதம்--போதிக்கும்
கஞ்சாம் இவையனைத்தும் "நாட்டின்முன் னேற்ற"மெனும்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—வே. ந. நாராயணன், தேசுமுகிப்பேட்டை.

★

சின்னஞ் சிறுவயதில் சிற்றில் விளையாடி
பின்னர் பெருங்காதல் பெறவிழைக்தோம்--முன்னோர்சொல்
கஞ்ச மலர்க்குழலி! காதலழி சாதியதென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ந. ஆறுமுகம், ஏரிப்பேட்டை.

★

கொச்சி மணக்கும் நுணுமணக்கும் வேலியின்கீழ்
குச்சி பொறுக்கும் குளிர்மலரே--கச்சடங்கித்
துஞ்சும் கினதிரண்டு துணைக்கனிகள் ஐயகோ!
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

நாவரசன், நன்னியூர்.

★

கங்கைக் கரையில் கனக விசயர்தம்
அங்கமேல் கல்சுமக்கச் செய்சேரன்--அங்கொருநாள்
வஞ்சகரால் வேள்வியென்று மூட்டியதீ வண்டமிழர்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—சங்கமணி, பொள்ளாச்சி.

பற்றி யெரியுதந்தோ! பாழ்வயிறு நோகுதினிச்
சற்று முயிர்வாழேன் சால்புடையீர்!--பெற்றமகன்
வெஞ்சமரில் வீழ்ந்தான் புறங்காட்டி; இச்செய்தி
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—சாமி. எழிற்செல்வன், பாகனேரி.

★

பாரெல்லாம் பேர்பெற்ற பாராளும் நேருவாம்
சீரிலா வன்சொலைத் தென்னவர்மேல்--வாரியே,
நஞ்செனை, வீசினர் நங்காய்! அதுமெக்கு
நெஞ்சிலே யிட்ட நெருப்பு,

—இரா. சிதம்பரம், திருப்பரங்குன்றம்.

★

கூடி மணம்புரிந்த கோலத் 'தமிழ்'மாது
வாடிக்கண் ணீர்வடிக்கும் வாசலிலே--ஆடித்தன்
வஞ்சவிழி காட்டிவரும் 'இந்தி'ப்பெண் தாய்நாட்டின்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—தில்லைக்கூத்தன், சென்னை-6.

★

பஞ்சாலும் பட்டாலும் பஞ்சபல நெய்வார்தாம்
கஞ்சியெனக் கைகுவித்துக் கெஞ்சினால்--கெஞ்சிலாமல்
மிஞ்சவிலை எங்கேனும் துஞ்சுபோ என்றமொழி
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—கி. சௌந்தரராஜன், பண்ணைக்காடு.

★

அப்போது நம்நாட்டை ஆங்கிலேயர் ஆண்டனரே
இப்போது ஆளுகின்றார் இவ்வடவர்--எப்போதும்
பஞ்சையேம்; எண்ணிவிட்டால் பற்றி எரியுதே
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—க. சுப்பிரமணியம், கொண்டலாம்பட்டி.

★

கன்னற் றமிழ்மொழியில் கலைபலவும் பயின்றதற்கு
இன்னல் தரும்வகையில் ஆளவந்தார்--தென்னினத்துப்
பிஞ்சுத் தமிழில் புகுத்துமிந்தி எங்கட்கே
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—என். ஆர். சேகர், சிவகங்கை.

★

எண்ணியவெண் ணப்படியே யெற்குமுடிக் காலன்றி
மண்ணிலுள்ள நீரையெல்லாம் வார்த்தாலும்--[விண்ணிலுள்ள
மஞ்சிலே யுற்றமழை யாதுமவி யாதேயெம்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—க. மா. முத்துச்சாமிப் புலவர், அருப்புக்கோட்டை.

★

மாலையிட்ட என்மனைவி மக்களிடர் கண்டுதன்
மேலையிட்ட சேலைதனைத் தந்திட்டே,--"சேலைவிற்று
அந்திக்குள் வந்திடுவீர் அத்தான்" எனுங்கூற்றென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ஆ. வி. நாதன், கோவை.

★

வாழ வுழைக்கின்ற மக்கள் குவித்தவளஞ்
சூழ விறுமாந்த செல்வத்தீர்--ஏழைகளாம்
பஞ்சிலே பட்ட பசிநெருப்பு நும்போல்வார்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—பா. நாராயணன், தமிழாசிரியர், மேட்டுப்பாளையம்.

★

மடமை மருளுடைமை பேதைமை யின்ன
உடைமை யனைத்தும் ஒழியக்--கடமைதான்
எஞ்சியே நின்ற தினியோய்! பகுத்தறிவென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—வெண்டேர்ச்செழியன், பாகனேரி.

★

கொஞ்சியே தேன்பொழிய கோகிலமாய்ப் பேசிவிட்டு,
வஞ்சகவேள் வாளியினால் வாடவிட்டாய்!--வஞ்சவிழி
வஞ்சியே, வேகுதடி வானளவும்; நீனது
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ஆர். மல்ல பிள்ளை, சத்திரமனை.

★

குஞ்சி தனைநீவிக் கொல்லைப் புறவழியாய்
வஞ்சக் குரங்கு வரக்கண்டும்--வஞ்சி!
கொஞ்சு தமிழ்க்கூட்டம் கோலெடுக்க வில்லையிது
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—பண்ணவன், உடுமலை.

வெண்பாப் போட்டி

13. நெஞ்சிலே யிட்ட நெருப்பு !

வெண்பாப் போட்டி 13-ன், பரிசுபெற்ற வெண்பாவும், பிரசுரத்திற்குத் தகுதியுடைய வெண்பாக்களும் சென்ற இதழில் பிரசுரமாயின ; தகுதியுடையன சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டுள்ளோம்.

நாடுண்டு ஆந்திரர்க்கு நாடும் திராவிடர்க்கு
நாடில்லை யென்றிட்டால் நன்மொழியோ--நாடின்றேல்
கொஞ்சி எவருரைக்கும் சொல்லமு தாயினுமெம்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—தேவராசு, கோயமுத்தூர்.

★

சிந்தை களிகூறும் செந்தமிழைத் தேய்க்கவரும்
கந்தல் மொழியைக் கருவறுப்பீர்--அந்தமொழி
நஞ்சுபோல் நம்மை நலிவாக்கும் வஞ்சகர்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—சி. வரதராசன், பொட்டனேரி.

★

மான மிழந்தேனும் வாய்ருசிக்க உண்கவெனும்
ஈன முடிவுடையார் ஆரியரே--ஆனால்நம்
செஞ்சொல் நவிலுந் திராவிடர்க் கிம்முடிவு
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

சாதியுண்டு, பஞ்சமுண்டு, சாவார்க் குணவளிக்க
நாதியில்லை பாட்டு நடனமுண்டு--ஈதேதான்
அஞ்சாண்டுத் திட்டமாம் ! அந்தோ வறியவர்தம்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—''குறும்பை மன்னன்'', குறும்பலாப்பேரி.

★

நிலவே ! ஒழி ! இன்றேல் நின்னையே தீய்த்து
அலகலகாய்ப் போழ்ந்தெரிக்கு மன்றே -தலைவனிலா
மஞ்சிலே நான்வாட வன்கிரணம் நீபொழிந்தென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ம. சா. விக்ளிப், பாளையங்கோட்டை.

★

கொத்தவரைப் பந்தலிலே குந்தியதோர் சிட்டுதனை
செத்துவிழச் செய்ததுபார் சிராய்நான்--வத்தித்துக்
கொஞ்சமுந்தப் பாமற் குறிபார்த்த துப்பாக்கி
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—பி. எஸ். ஜெயசிங் பாண்டியன், சேர்மாதேவி.

★

'தென்ற' லிதழினிலே செந்தமிழை உண்டிடலாம்
என்ற இதயமொடு விற்குமிடம்--சென்றுகேட்டேன்
மிஞ்சிவிட்ட தென்றுரைத்தான் ; அவ்வுரையே அப்போழ்தென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—மணி. இந்திராதேவி, நத்தம்.

★

பாரில் பிறந்தவர் யாவரும் அன்பினால்
ஓரினமாய் வாழ்ந்த தமிழ்நாட்டில்--ஆரியரின்
வஞ்சகத்தால் வந்தவரு ணாசிரமம் செந்தமிழர்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—சு. சுடலையாண்டி, B.Sc., செங்கோட்டை.

★

இலங்குதமிழ் மன்னவனை எந்தமிழின் வித்தை
இலங்கைக்கே வெற்பாகும் வேந்தை--நலங்குலைக்க
அஞ்சிலே ஒன்றை அவண்வைத்தார் ; அஃதெங்கள்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—துரை-மாணிக்கம், புதுவை.

திண்ணங் கருகத் திறங்கருக நம்மனத்
தெண்ணங் கருக எரிக்குமே--கண்ணிலா
வஞ்சக ராரியர் வைத்த ''சமயமாம்''
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—கி. சந்திரசேகரன், தேசுமுகிப்பேட்டை.

★

பைந்தமிழாய் யான்பிறந்து பார்முழுதும் சென்றுவந்தேன்
நைந்துநொந்து வேகின்றேன் இன்றுநான்--மைந்தர்காள் !
கிஞ்சமோ கேசரிக்கு(க்)? 'கேவல்(ப்)ப தா'வென்றன்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

சா. தமிழன்பன், பாகனேரி.

★

திணிபடை வெம்போர் திறல்வேந்தர் தோற்பும்
வணிகர்க்குத் தம்பொருள் மாய்வு(ம்)--அணியிழாஅய்
செஞ்சொற் புலவர்க்குச் சேர்ந்த வறுமையுமே
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—பெ வரதராசன், குகை, சேலம்.

★

ஆரியத்தின் கால்வருட அயராத கம்பனவன்
வீரியமாய் அவர்வாழ வழிசெய்தான்--பாக்களெனும்
பஞ்சினால் ஒற்றிடினும் போயிடுமோ பாவிஅவன்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ப. பாலாம்பாள், கோவை.

★

ஆரியனின் அம்பன்று அவ்வடவர் ஆற்றலன்று
சீரிலங்கை யானைச் சிதைத்ததுகாண்--பூரியன்பால்
வெஞ்சமர்க்கண் வீடணன்கொள் வெம்பகையே ஆங்கதவன்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ஜே. என். வதனு, கீழப்பாவூர்.

★

இன்பம் பெருக்கி எழிலைக் கொடுத்திட்ட
அன்பன் நினைவதனில் ஆழ்ந்திருந்தேன்--என்னிதழைக்
கொஞ்சியே சென்ற கொழுநன் இறப்பென்றன்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—சோ. பாலகிருட்டிணன், காரைக்குடி.

★

மாந்தர்கள் எல்லாம் மதப்போதை விட்டொழித்துச்
சாந்தி மிகப்பெறவே தான்நடந்த--காந்தியினைக்
கொஞ்சமும் அன்பின்றிக் கொன்றானே ; என்றசொல்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—செ. கிருஷ்ணசாமி, அரக்கோணம்.

★

முல்லை மடல்விரிக்க முற்றத்தில் நாற்றமெழும்
எல்லைப் பொழுதுறுவேன் என்றகன்றார்--மெல்லியலே !
மஞ்சள் ஒளிமறைந்தும் வாரார் அவர் செயலென்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—இரா. சிவஞான வள்ளல், வேலூர்.

★

பெற்றெடுத்த தாய்பேணிப் பாலுடன் சேர்த்தூட்டி
வற்றாத வாய்மொழி வள்ளுவன்--கற்றஎம்
கொஞ்சு மொழிதமிழில் வேற்றுமொழி சேர்த்திடுதல்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—செ. காளியப்பன், தியாகராஜபுரம்.

★

காட்சிமொழிக் காலத்தே கண்ணகிமுன் பாஞ்சாலி
மாட்சியுடை யோளானுள் மற்றிந்தி--ஆட்சிவரின்
அஞ்சுகமும் தென்னகத்தில் ஆந்தையாம் இந்நிலைநம்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—க. குணசேகரன், சென்னை-3.

★

மிஞ்சுகலை யின்ப மிகுந்திருக்கு நந்தமிழில்
பஞ்சையா மிந்திபுகப் பார்த்திருத்தல்--நெஞ்சையள்ளும்
கொஞ்சுவளச் செந்தமிழின் கூர்மைமிகு பைந்தமிழின்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—ந. தங்கராசு, திருவலஞ்சுழி.

★

வந்தபிற நாட்டார் வளமிகுந்து வாழ்ந்திருக்கச்
சொந்தத் திராவிடத்தார் சோர்ந்தலைந்து--நைந்துடன்
கஞ்சிதான் போதுமெனுங் காட்சியே செந்தமிழர்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—பெ. பாலகிருட்டினன், சேலம்.

★

வஞ்சித்தோம் வாழ்ந்தோம் வலுப்பெற்றோம் வண்டமிழர்க்
கஞ்சினோம் ஆற்றலில்லா ஆரியர்யாம்--மிஞ்சுகிறார்
அஞ்சாத் தமிழர் ! அவர்முழக்கம் எம்மவரின்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

—வித்துவான் இல. அரவரசன், இராமநாதபுரம்.

(11-ம் பக்கம்)

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.